குலம் – குல

தூரம் (தொல் – தூர்) – தூரம்

| | |
|---|---|
| விதி | – விதி |
| ஆசை | – ஆஷா/ ஆஸா |
| தீவு | – த்விபஹ் |
| இயந்திரம் (இயங்கு திறம்) | – யந்திரஹ் |
| தூதன் | – தூதஹ் |
| அமிழ்தம் | – அமிர்தம் |
| பலி | – பலிஹ்/ பலி |
| விருத்தன் (முதிர்ந்தவன்) | – விருத்தஹ் |
| வேதனை | – வேதனா |
| சிகரம் (மூலம் சிக்கு = சிகை = தலை =உச்சி) | – சிகர |
| (பூசெய்) பூசை | – பூஜகஹ் |
| தண்டனை | – தண்டஹ் |
| (மூலம்: தண்டம் = கோல், கோலால் அடித்தல்) | |
| பலம் | – பல |
| வியாதி | – வியாதிஹ் |
| (வி = அகன்ற, பெரிய ஃ வியா பெரிய, பரவுகிற நோய் | |
| மௌனம் (மு/ம = வாய் + ஊனம்) | – மௌனம் |
| அற்பம் (மூலம் அல்ல –அல்) | – அல்பம் |
| சொற்பம் (மூலம் சிறு) | – ஸ்வல்பம் |
| வண்ணம் | – வர்ணம் |
| (ர், ஒட்டு எ.கா.– கோவை-> கோர்வை) | |
| அரசன் (முன்னுயிர்ப் பெயர்ச்சி விதிப்படி) | – ராஜா |
| யாத்திரை | – யாத்ரா |
| சாயுங்காலம் | – சாயம்/ஷ்யாம் / ஷாம் |
| உலகம் | – லோஹ் |
| அனல் | – அனல |
| மை (மா = கருப்பு மா> மை) | – மஷி |

| | | |
|---|---|---|
| மீன் (மின்னுவதால்) | – | மீன் |
| முத்து | – | முக்தா |

(தமிழகக் கடலில் மட்டுமே கிடைத்தது முத்து; தமிழனே பெயரிட்டான்)

| | | |
|---|---|---|
| கூகை (ஆந்தை) | – | கூகஹ் |
| (தாவி) ஓடு | – | தாவ் |
| அணு | – | அணுஹ் |
| சேது | – | சேது |

பாலம் (சேர்த்தல்) = சேது (தமிழில் பால் என்றால் இடம் என்ற பொருள் உள்ளது)

| | | |
|---|---|---|
| ஞானம் (காண் =சாண் = ஞான்) | – | ஞானம் |
| திரவியம் | – | த்ரவ்ய |
| சுபம் (சு =6; மங்களகரமான எழுத்து ஃ மங்கல முடிவு) | – | சுபம் |
| ஆத்மா (ஆதன் = மனிதன்) | – | ஆத்மா |
| தானியம் (தாள்= பயிர் -> தான் | – | தான்யம் |

## முடிவுரை

சமஸ்கிருதச் சொற்களை உடைத்துப்பார்த்தால் பல நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ் சொற்கள் திரிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு பிணைக்கப்பட்டிருக்கும் என்பார் சாத்தூர் சேகரன். அக்கூற்று முற்றிலும் உண்மை.

மேலே கண்ட எடுத்துக்காட்டுகள் ஒன்றல்ல, ஓராயிரம் சமஸ்கிருதச் சொற்களைப் பகுத்துப்பார்த்தாலும் யாவும் தமிழே என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

# இருவேறு நிலத்து இயற்கை . . .

## திராவிடமும் ஆப்பிரிக்கமும்

க. ப. அறவாணன்
முன்னாள் ஆப்பிரிக்கவியல் ஆய்வாளர்,
தக்கார் பல்கலைக் கழகம்,
செனகால்.

இந்தியத் திராவிடரையும் ஆப்பிரிக்க நீக்ரோ மக்களையும் ஒப்பிட பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அவை: அரசியல், பொருளியல் சமுதாயவியல் ஆகியவற்றைச் சார்ந்தவை. நிலவியலும் உயிரியலும் கூடத் துணைக் காரணங்களாக விளங்கும். இவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

**1. நிலவியல்:**

இருவேறு பகுதிகளை முப்புறமும் கடல் சூழ்ந்துள்ளன. இரண்டும் பூமத்திய ரேகைக்குப் பக்கத்தில் உள்ளன. எனவே வெப்ப மண்டலப் பகுதிகளாக அமைந்துள்ளன. போதிய மழை இல்லாமல் வானம் பார்த்த மண்ணாக புன்செய்ப் பகுதி நிலமாக இணைந்துள்ளன. காடுகள் குறைவு.'சவன்னா' பகுதியே மிகுதி. பசுமை மிகாத உயரம் குன்றிய மொட்டைப் பாறை மலைகளே பரவியுள்ளன. இந்நிலவியல் காரணங்களால் இங்குள்ள மக்கள் வெயிலைத் தாங்குவதற்குரிய கறுப்புத் தோல் மக்களாக விளங்குகின்றனர். உயிர் வளியை மிகுதியாக ஈர்ப்பதற்கு வாய்ப்பாக மூக்குகள் பரந்தும், பருத்தும், தட்டையாயும், பெரிய துவாரம் உடையனவாயும் உள்ளன. தலை, உடல், இமைமுடியும் கறுப்பாக உள்ளன. காற்று உட்செல்ல வாய்ப்பாக திறந்து இதழ்களை விரித்து உரத்துப் பேசும் மக்களாக உள்ளனர். இவர்களின் மொழிகளும் பெரிய அளவு அடிக்கடி அங்காந்து பேசும் மொழிகளாக உள்ளன. உயிரெழுத்துக்களை அங்காத்தல் மூலமே ஒலிக்க முடியும். குளிர் நாட்டு மொழிகள் 5 உயிர் ஒலிகளைக் கொண்டிருக்க, வெப்ப நாட்டு மொழிகள் 12 க்கும் மேற்பட்ட உயிர் ஒலிகளைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மழை பார்க்கும் மண்ணாகவும் குடிநீர்க்குத் தவிக்கும் மக்களாகவும் இருப்பதால் நீருக்குப்பெரும் முதன்மை தருகின்றனர். நீருக்கும் மழைக்கும் இம்மக்களின் மொழிகளில் நிறைய சொற்கள் புழங்குகின்றன. எனவே இவர்கள் வழிபாடுகள் நீரை ஒட்டிய வழிபாடாகவும், மழையை ஒட்டிய வழிபாடாகவும் மிகுதியாக அமைந்துள்ளன. வெயிலிலேயே மிகுதியான காலம் வாடுவதால்

நிழலின் அருமை இவர்களுக்கு மிகுதியாகத் தெரியும். எனவேதான் நிழல்தரும் மரம் இவர்களுக்கு ஒரு காலத்தில் வீடாக இருந்தது. மர வழிபாடும் இவர்களிடம் பெரிதாகப் போற்றப்படுகிறது வெப்ப மண்டலத்தில் உள்ள நல்ல பாம்புகள் நஞ்சுத்தன்மை மிகுதியாக உள்ளவை. மக்களைக் கடித்தே கொன்றுவிடும். சாவுக்குக் காரணமான பாம்பை அச்சத்தின் அடிப்படையில் இவர்கள் வழிபடுவதற்கு இதுவே காரணம்.

## 2. உயிரியல்:

மேலே சுட்டியவாறே மரவழிபாடும் பாம்பு வழிபாடும் ஈரிடத்தும் இருப்பதற்குக் காரணம் நிலவியல் சார்ந்த உயிரியல் தோற்றமே ஆகும். இருபகுதி மக்களும் அரிசி உணவையே தலைமை உணவாகக் கொண்டுள்ளனர். அரிசியே அங்கே விளையத் தகுவது அதுவன்றி, காய்கறிகள், கீரை வகைகள், கூழ் வகைகள், முருங்கைக் கீரை முதலானவைகள் பொதுஉணவு வகைகளாக இருந்து வருகின்றன. புலால் உணவில் ஆடு, கோழி மீன் ஆகியன முன்னிடம் பெற்றுள்ளன. (தாயம்மாள் அறவாணன்; திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு; உணவுப் பழக்கம். பக்.22) தென்னிந்திய நிலவியலும் ஆங்குள்ள யானை முதலான உயிரியலும் மிகப்பெரிய அளவில் ஆப்பிரிக்க மண்ணுடன் இணைந்துள்ளன. (விரிவிற்குப் பார்க்க K.P. Aravaanan; Anthropological Studies.

## 3. அரசியல்:

ஆப்பிரிக்காவில் வடபகுதியான எகிப்தும் இந்தியாவின் வடபகுதியான சிந்துவெளியும் மிகப் பழமையான நாகரிகம் உடையவை. இவை இரண்டுமே கறுப்பர்கள் படைத்த நாகரிகங்கள் ஆகும். நைல் ஆற்றை ஒட்டி எகிப்து நாகரிகமும் சிந்து ஆற்றை ஒட்டி ஹரப்பா மொகஞ்சதாரோ நாகரிகமும் உருவாயின. நீர் பார்க்கும் மக்கள் ஆகையில் ஆற்றை ஒட்டியே பெரிய நாகரிகத்தைப் படைத்தனர். ஆனால் இருவர்தம் நாகரிகங்களும் பின்னாளில் அழிக்கப்பெற்றன. எதிரியையே எதிர்பார்க்காத நல்லோராய் இவர்கள் இருந்தமையால் எதிரிகளால் எளிதே வீழ்ச்சிக்கு உள்ளாயினர்.

தமக்குரிய கறுப்பு நிறம் பற்றி வெள்ளை நிறமக்களைப் பார்த்தவுடன் தாழ்வுணர்வு இவர்களுக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். எனவே வெள்ளை நிற மக்களை தேவர்களாகவே இவர்கள் கருதினர். (அலெக்சாண்டர் – கான்றதாவ் முக்கடல் மருமம் – பார்க்க) எனவே தொல்பழங் காலத்தில் கிரேக்கர்களுக்கும் உரோமர்களுக்கும் எளிதே அடிமையாயினர். பின்னாளில் ஐரோப்பியர்களுக்கும் அடிமை யாயினர். அடிமை உள்ள காலத்தும் விடுதலை உருவாகியிருந்த ஆப்பிரிக்க இனக்குழு (ETHNIC) வேறுபாடும் இந்தியச் சாதிப்பிளவு வேறுபாடும் தொடர்ந்து இருந்து வருகின்றன. அதனால் அயராத் துன்பங்களை இம்மக்கள் அடைந்து வருகின்றனர்.

ஐரோப்பியர் குடியமர்ந்த அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான கண்டங்களுக்கும் மொரீஸிஸ், மடக்ரஸ்கர் முதலான தீவுகளுக்கும் ஆப்பிரிக்க, தென்னிந்திய மக்கள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

நீண்ட நெடுங்காலம் ஐரோப்பிய ஆதிக்கத்தில் இம்மண்டலங்கள் இருந்தமையால் ஐரோப்பிய மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியன இந்த இருபகுதி நாடுகளையும் இன்று பிடித்து ஆட்டி வருகின்றன.

விடுதலை பெறும் பொழுதும் இம்மக்கள் மொழி வழியும் இனக் குழு வழியும் பிரியாமல் காலனி அமைப்பு வழி தனியாயினர்.

வடமேற்கு இந்தியாவையும் வடக்கு இந்தியாவையும் துருக்கியிலிருந்து பரவிய இசுலாமியர் பற்றிக் கொண்டது போல, வட, வடமேற்கு ஆப்பிரிக்காவையும் இசுலாமியர் பற்றிக் கொண்டனர். அப்பகுதியிலிருந்து கருப்பர் தெற்கே விரட்டப் பட்டனர்.

## 4. பொருளியல்:

வெப்ப மண்டலங்களான இரு பகுதியும் வானை நம்பி வாழ்பவை. வான் பொய்க்கும்போது வளமை பொய்க்கும் எனவே பஞ்சமும் பட்டினியும் தொடர்ந்து அல்லல்படுத்தும் சுயவழிப்பொருளாதாரத்தை அறிமுகப் படுத்தாமல் ஐரோப்பிய நுகர்வு வழிப் பொருளாதாரத்தை ஏற்றுப் பழகிக் கொண்டதால், இருபகுதிகளும் பொருளாதாரச் சமத்துவமின்றித் தள்ளாடுகின்றன. மக்கட் தொகைப் பெருக்கம், வறுமை, வேலை இல்லாமை, படிப்பின்மை, இருமண்டலங்களிலும் இருந்து பொருளாதார முயற்சி பெறமுடியாமல் தடுக்கின்றன.

## 5. சமுதாயவியல்:

உடல் உழைப்பையே நம்பிவந்த சமுதாயம் என்பதால் உடல் உழைப்பிற்குக் காரணமான கைகள், அவற்றிற்குரிய பிள்ளைகள் சொத்துக்களாக மதிக்கப் பெற்றன. மதிக்கப்பெறவே பிள்ளைகளை மிகுதியாகப் பெற்றுக்கொள்வது பெரும்பாக்கியமாகக் கருதப்பெற்றது. எனவே ஒருவன் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொள்வதும் குழந்தைகளைப் பெறுவதும் பெருக்குவதும் செல்வமாகக் கருதப் பெற்று வந்தது. எனவேதான் பலதர மணத்தை ஏற்றுக் கொண்டது. இசுலாம் விரைவாகப் பரவியது. ஒருவன் ஒருத்தி கோட்பாட்டை வற்புறுத்தும் கிறுத்துவம் போதிய அளவு பரவவில்லை. இந்தியாவை சாதிப்பிளவு சீரழிப்பதைப் போல ஆப்பிரிக்காவை இனக் குழுப்பிரிவு சீரழித்து வருகிறது. குழந்தைப் பெருக்கத்திற்குப் பெண்ணே முதன்மை என்பதால் பெண்ணை முன்னிலைப் படுத்தும் அன்னை வழி பாடு இங்கே தொல்காலத்தில் தலைமை பெற்றிருந்தது.

# ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளும் தமிழும்

[பி. இராமநாதன் எம்.ஏ., பி.எல். ]

ஆஸ்திரேலியாவை ஐரோப்பியர்கள் முதலில் கி.பி. 1770 இல் கண்டுபிடித்தனர். இந்தியவைப் போல மூன்று மடங்கு பரப்புள்ள அந்நாட்டின் மொத்த மக்கள் தொகை இப்பொழுது 2 கோடி. ஏறத்தாழ அவர்கள் அனைவரும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அங்குக் குடியேறியுள்ள ஐரோப்பியர்களேயாவர் ஏறத்தாழ ஓர் இலக்கம் பேர் மட்டுமே பழங்குடி மக்கள் உள்ளனர்.

வெள்ளையா அக் கண்டத்தில் நுழைந்த காலத்தில் இருந்த பழங்குடி மக்கள் எண்ணிக்கை 3 இலக்கம் ஆகும். வெள்ளையர்களால் விரட்டி வேட்டையாடிக் கொல்லப்பட்டும் அவர்களிடமிருந்தும் பரவிய தொற்று நோய்களால் மாண்டும் பழங்குடியினர் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து கி.பி. 1960க்குள் 50,000 ஆகிவிட்டது கடந்த 25 ஆண்டுகளுக்குள் ஓரளவு அவர்கள் எண்ணிக்கை அதிகரித்து இப்பொழுது ஓர் இலக்கத்தை எட்டியுள்ளது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் முன்னோர் ஏறத்தாழ கி.மு. 30,000 வாக்கில் இந்தோனேசியத் தீவுகளான டிமோர்; செலிபீஸ் ஆகியவற்றின் வழியாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்திருக்க வேண்டும் என்று அறிஞர்களால்[1] கருதப்படுகிறது. அக்காலத்தில் கடல்மட்டமானது உலகெங்கும் தற்பொழுதுள்ளதைவிட ஏறத்தாழ 400 அடியிலிருந்து 600 அடிவரை குறைவாக இருந்தது. நிலப்பரப்புகள் அதிகமாக இருந்தன. ஆஸ்திரேலியாவின் நிலப்பரப்பும் இப்பொழுதைவிட ஏழில் ஒரு பங்கு அதிகமாக இருந்தது. ஆஸ்திரேலியாவுக்கும் அதற்கு வடக்கே நியூகினிக்கும் நடுவே இப்பொழுது கடலாக இருக்கும் பகுதி அப்பொழுது நிலமாகவே இருந்தது. இந்தோனேசியத் தீவுகளான டிமோர் முதலியவற்றிலிருந்து கட்டு மரம் போன்றவற்றில் சில மணி நேரத்தில் அக்காலத்தில் ஆஸ்திரேலியாவை அடைய முடிந்திருக்கும். அவ்வாறுதான் முதலில் மனிதன் ஏறத்தாழ 30,000 ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரேலியாவை அடைந்திருக்க வேண்டும் நுழைந்து ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குள் ஆஸ்திரேலியா முழுவதும் பரவியிருக்க வேண்டும்.

கடல்மட்டம் படிப்படியாக உயர்ந்து கொண்டுவந்து கி.மு. 15,000க்குள் ஏறத்தாழ 200 அடி உயர்ந்துவிட்டது. பின்னர் கி.மு. 6,000லிருந்து கி.மு. 4,000க்குள் கடல்மட்டம் மேலும் கிடுகிடுவென உயர்ந்து ஏறத்தாழ

---

1. "The Pre-history of Australia" - D.J. Mulvaney (Thames and Hudson, London; 1969; pp.276)

"Triumph of the Nomads - A history of Ancient Australia" - Geoffrey Blainey (Macmillan; 1975; pp.285)

தற்போதைய நிலையை அடைந்துவிட்டது. ஆஸ்திரேலியாவும் தனிக் கண்டம் ஆனது. இவ்வாறு கடல்மட்ட உயர்வுகள் நிகழ்ந்தபோது தமிழகத்தைச் சார்ந்த நிலப்பகுதிகள் இந்துமாக்கடலுள் மூழ்கியதனையே பண்டைத் தமிழிலக்கியங்களில் உள்ள கடல்கோள் செய்திகள் குறிக்கின்றன எனலாம்.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் அனைவரும் ஒரே இனத்தவர் என்பது ஒரு சாரார் கொள்கை. மூன்று இனத்தவர் என்பது மற்றொரு சாரார் கொள்கை. வட ஆஸ்திரேலியாப் பகுதிகளில் வாழும் "கார்பென்டாரியன் இனம்;" தென் பகுதிகளில் வாழும் "மர்ரே" இனம்"டாஸ்மேனியாத் தீவில் முன்னர் வாழ்ந்துவந்த "டாஸ்மேனிய" இனம் ஆகியவையே அம்மூன்று இனங்கள்.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் – குறிப்பாக "கார்பென்டாரியன்" இனத்தவர்கள் தோற்றத்தில் முற்றிலும் தமிழர்களைப் போன்றே இருப்பார்கள்.[1] தமிழர்களைப் போன்றே அவர்களும் அததை மகளைத் திருமணம் செய்யும் "முறைப் பெண்" மணமுறையைக் கடைப்பிடிப்பவர்கள். ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தனிமைப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் பண்டு பேசிய – மொழி "ஒன்று பலவாகி"இப்பொழுது 200க்கு மேற்பட்ட மொழிகளாக (கிளை மொழிகள் – dialects – என்பதே பொருத்தம்) ஆகியுள்ளது. அப் பழங்குடி மக்கள் பயன்படுத்தும் "பூ மெராங்" என்னும் கருவியானது இன்றும் தமிழகத்தில் புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள "வளைதடி" தான்.

அம் மக்களுடைய மொழிகள் திராவிட (தமிழ்) மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற கருத்தை காலடுவெல் உள்ளிட்ட அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். மாற்றுக் கொள்கையினரும் உண்டு: ஆயினும் அவர்களுள் பெரும்பாலோர் தமிழை அறியாதவர்கள். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களை விவரிக்கும் சில நூல்களில் கண்டுள்ள பழங்குடி மக்கள் மொழிகளில் அடங்கிய சொற்களுள் தமிழுடன் தொடர்புடைய சிலவற்றைக் காண்போம்:

ஞாம் பு ல = **என் கண்**

ஞீங்கு புல = உன் கண்

அம் புல = அவன் கண்

ஞிங்ஙீபுல = அவள் கண்

இஞ்ஞா = இவன்

---

1. "We the aborigines" by Douglas Lockwood; Gassell; Australia' 1963; pp.259

பக்கம் 42: – All Australian aborigines are supposed to be descended from Dravidians who maigrated about 15,000 years ago from India and Ceylon.

இனே = உவன்

ஈரு = அவன்

ஞாரெண்டு = நீயும் நானும் (உளப்பாட்டுப் பன்மை)

ஆரெண்டு = அவனும் நானும்

ஞஞ்ஞா = தந்தை

இறைய = தந்தை

இளையரு = இளைஞர்

பள நாளி = பழங்காலம் (பழைய நாள்)

மன்றே = மன்று

பூய் (Bui) = போ

கலம் = (கட்டுமரம்) கலம்

உஞ்ஞான்குரு = ஆறு தோன்றும் இடம்

உமிஞ்ஞாங்குரு = ஆறு கடலில் சேரும் இடம்

ஆன் மா நின்னின் இஞ்ஞார நோங்கு = மகிழ்ச்சி, உன்னை இங்கே பார்க்க

யாள் வோங்க = யார் சொன்னது.

ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளைப்பற்றி அண்மையில் வெளிவந்துள்ள சில நூல்களின் விவரங்களை அடிக்குறிப்பில் காணலாம். தமிழறிஞர்கள் மேலும் ஒளி தருவார்களாக. இம்மொழிகள் விரைவாக அழிந்து வருகின்றன. முற்றிலும் அழியுமுன் தமிழாய்வாளர் சிலர் ஆஸ்திரேலியா சென்று அப்பழங்குடி மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு தமிழின் தொன்மையையும் சிறப்பையும் நிலைநாட்ட வகைசெய்வது தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவற்றின் கடமையாகும்.

---

1. "The languages of Australia" by R.M.W. Dixon Cambridge University Press; 1980 பக்கங்கள் xxii; 547;

Handbook of Australian languages; I Edition; R.M.W Dixon and Barry J.Blake; Canberra; Australian National University Press; 1979 பக்கங்கள் ; 390.

Colin Yallop. "Australian Aboriginal languages" Andre Deutsck; 1982; London; pp 188;

# அறிஞர் ஆபிரகாம் பண்டிதரின் மொழியியல் சிந்தனைகள்

## முனைவர் மலையமான்

தமிழை அயல் நாட்டு அறிவுச் செல்வர்கள் வளப்படுத்தினார்கள். கால்டுவெல், போப், வின்சுலோ, பெஸ்கி (வீரமாமுனிவர்) ஆகியோர் அப்படிப்பட்ட போற்றுதலுக்கு எப்போதும் உரியவர்கள். அத்தகைய சாதனை புரிந்த தமிழர்கள், இந்த மண்ணிலும் அண்மைக் காலத்தில் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் காலப் புழுதி படிந்து இன்றைய ஞாலத்தின் பார்வையில் மங்கிக் கிடக்கிறார்கள்.

தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியத்தைத் தனி ஒருவராக எழுதிய சிங்கார வேலு முதலியார், மறைந்து போன யாழ் இசைக்குப் புத்துயிர் ஊட்டும் முறையில் பெரிய யாழ் நூல் படைத்தருளிய விபுலாநந்த அடிகள், பல நூற்றாண்டுகளுக்குரிய வானவியல் நூல் படைத்த எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை, கணிதத்துறையில் ஆய்வுப் புதுமைகள் நடத்திய சிவ சங்கர நாராயணப்பிள்ளை, தமிழிசையின் மேன்மையை நிலைநாட்டும் அரு நூலான கருணாமிர்த சாகரம் தீட்டிய ஆபிரகாம் பண்டிதர் ஆகியோர் அருஞ்சாதனை புரிந்த பெருமைக்கு உரியவர்கள்.

மு. ஆபிரகாம் பண்டிதரும், புகழ்பெற்ற சித்த மருத்துவர், செய்தொழில் வினைஞர், அகர முதலி தொகுப்பாளர், வரலாற்றாசிரியர், சோதிட நூல் புலவர், பயிரியல் வல்லுநர், என்ற பல்வேறு சிறப்புகளுக்கு உரியவராக இருந்தாலும், அவரை இசைப் பேரறிஞர் என்றுதான் பாரகம் போற்றுகிறது.

இசைத் துறையில், அவருடைய ஆய்வு இணையற்றது. தமிழிசையே உலகின் முதல் இசை. அதில் சுரம் 22 ஆக நடைமுறையில் உள்ளன. வடநாட்டு இசையறிஞர்கள் தமிழக இசை இலக்கணம் ஏற்றுப் பயன் கொண்டனர். கர்நாடக இசை என்று இன்று கூறப்படுவது தமிழிசையே. அந்தத் தமிழ் இசையே, கிரேக்க நாட்டுப் பிதகோரஸ் மூலமாக இன்று உலக இசைக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது என்பது அந்த இசையறிஞரின் ஆய்வு முடிவுகள்.

ஆபிரகாம் பண்டிதர் மொழியியலிலும் ஆய்வு செய்து முடிவுகள் கண்ட முனைவர் என்பது ஒரு சிலருக்கே தெரியும். அவருடைய கருணாமிர்த சாகரம் என்ற இசைக்களஞ்சியத்தின் முதல் பகுதி 1365 பக்கங்களைக்

கொண்டது. இதை இசை வல்லார் மட்டுமே தொட்டுப் படித்தால் பயன் கிட்டும் என்று பலரும் ஒதுக்கி விட்டனர். ஆபிரகாம் பண்டிதர், கருணாமிர்த சாகரத்தின் முதல் பகுதியிலுள்ள முதல் பிரிவில், தமிழ் மொழியைப் பற்றி ஆராய்ந்து பல அறிஞர்களின் மேற் கோள்களைக் காட்டி அரிய செய்திகளை அளித்துள்ளார்.

அந்த அறிஞர் மறைவுற்ற குமரிக் கண்டத்தைப் பற்றி எழுதியுள்ளார். "இந்து மகா சமுத்திரத்தில் ஆதி மனுஷ்யர்கள் உற்பத்தியாவதற்கு இடமாயிருந்ததென்றும் எல்லா ஜாதிகளும் சமமாய் தங்கியிருந்த தொட்டிலாயிருந்ததென்றும் அது அழிந்த பின், அதிலிருந்து தங்களுக்கு எதிர்ப்பட்ட கரைகளுக்குச் சென்று, அங்கு விருத்தியானார்கள் என்றும் தெரிகிறது. இந்து மகா சமுத்திரத்தைச் சுற்றியுள்ள தீவுகளையும், தேசங்களையும் இருக்கும் ஜனங்களையும் (அவர்களின்) பழக்க வழக்கங்களையும் செடி, கொடி, மரங்களையும் இயற்கையின் அமைப்பும் தெரிந்த சாஸ்திரிகள், லெமூரியா என்றழைத்துவரும் இக்கண்டத்திலிருந்து, ஜனங்கள் பரவியிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்" என்று அவர் கூறுகிறார். இதற்கு, தென்னிந்தியா சாதிகளும் பழங்குடியினரும் castes and tribes of Southern India, என்ற நூற்றொகுதியை எழுதிய எட்கார்தார்ஸ்டன் (Edger Thurston) என்ற அறிஞரின் கருத்தை அவர் ஆதாரம் காட்டுகின்றார். அந்தப் பெருங்கண்டம் கடல் கோளால் அழிந்தது என்பதற்கு, வில்லியம், பாகவதம், புத்த சமய நூல்கள், அமெரிக்க இந்தியரின் (செவ்விந்தியரின்) கருத்துகள் ஆகியவற்றை ஆதாரம் காட்டுகின்றார்.

லெமூரியா நாட்டில் (குமரிக்கண்டத்தில், ஆதிமனிதன் தோன்றினான் என்பது மட்டுமன்றி, அங்குப் பேசப்பட்டு வந்த மொழி தமிழ்தான் என்றும் உரைக்கின்றார். "குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் நடுவிலிருந்ததாகச் சொல்லப்படும் மிகுந்த நீர் வளமுள்ள ஏழ் தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும், ஏழ் முன் பாலை நாடும், ஏழ் பின் பாலை நாடும் ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகரை நாடும், ஏழ் குறும் பனை நாடும் ஆகிய 49 நாடுகள் அடங்கிய தென் பாண்டிய நாடே என்று அவர் கூறுகின்றார். ஏழு ஏழு நாற்பத்தொன்பது நாடுகள் என்று சொல்வதை நாம் கவனிக்கையில், நாவல் தீவு (நாவல் மரம்) இறலித் தீவு, (இந்தி மரம்) குசைத்தீவு (நாணல்) கிரவுஞ்சத்தீவு (ஒன்றில்) புஷ்கரத்தீவு (யானை) தெங்குத்தீவு. கமுகுத்தீவு என்ற ஏழு பெரும் பூபாகங்களும் ஆஸ்டிரேலியா, சுமத்ரா, ஜாவா, போல ஏழு தீவுகளாயிருந்திருக்கலாம் என்றும் அவை ஒவ்வொன்றும் எவ்வேழு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தோன்றுகிறது . . . கடலால் அழிந்த இந்நாட்டிற்குத் தென் மதுரை தலைநகராயிருந்தது. இதில் (இந்த லெமூரியா கண்டத்தில்) தமிழையே பேசினார்கள்" என்று அவர் அறிவித்துள்ளார்.

குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட கடல் கோள் காரணமாக, பலர் பிரிந்து பலநாடுகளில் குடியேறினர். அவர்களுடைய உணவு முறை, நாட்டின் தட்ப

வெப்பம், செய்தொழில் காரணமாக, அவர்கள் வேறு வேறு மொழி பேசும். நிலை அமைந்தது. ஆயினும் அவர்களின் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் இன்றும் கலந்துள்ளன என்று அவர் ஆய்ந்துரைக்கின்றார்.

"8000 வருஷங்களுக்கு முன்னிருந்த தொல்காப்பியர் காலத்தில், 4,400 வருஷங்களாக இருந்த முதற் சங்கத்தினர் ஆதரித்து வந்த தமிழ் மொழியே பூர்வமான மொழி என்றும் அவர்கள் இருந்த லெமூரியா அழிந்த பின் தங்களுக்கு எதிர்ப்பட்ட கரைகளுக்குத் தமிழர்கள் குடியேறினார்கள் என்று திட்டமாகச் சொல்லலாம். அவர்கள் சிதறிப்போன பின் தேச சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தபடியும் அகராதிகளுக்குத் தகுந்த படியும் கைத்தொழிலுக்கும் கல்விக்கும் தகுந்தபடியும் வெவ்வேறு மொழிக்காரராகவும், தேசத்தாராகவும் அழைக்கப்பட்டார்கள் என்று தோன்றுகிறது. மேற்படி காணப்படுவதே அதற்குப் போதுமான அத்தாட்சி. சமஸ்கிருத மொழியில் அநேக வார்த்தைகளும் எழுத்துகளும் தமிழிலிருந்து எடுக்கப்பட்டு வழக்கத்திலிருக்கின்றன" என்று அவர் திட்ட வட்டமாக முரசு அறைகிறார்.

அவர் பலமொழிகளில் தமிழ்ச் சொற்கள் இருப்பதற்குச் சான்று காட்டுகின்றார். அவற்றில் ஒன்று வருமாறு: "அக்காள் என்ற தமிழ் வார்த்தை சமஸ்கிருதத்தில் அக்கா = தாய் என்றும் கன்னடம், தெலுங்கு ஆகியவற்றில் மூத்த சகோதரி என்றும், மகாராஷ்டிரத்தில் 'அகா' என்றும் தன்கூசியன் பாஷையில் 'அக்கின்' என்றும் மங்கோலிய பாஷையில் 'அக்கான்' என்றும் திபேத்து பாஷையில் 'அக்கே' என்றும் துருக்கி பாஷையில் 'எகே' என்றும் மார்டுன் பாஷையில் 'அஇ' என்றும் உக்ரியன் பாஷையில் 'இலக்கியன்' என்றும் வருகிறது. இச்சொல் பால் மாற்றம் பெற்று, மாங்கல் பாஷையில் 'அகா' மூத்த சகோதரன், தன் கூசியன் பாஷையில் 'அகா' மூத்த சகோதரன் என்றும் ஒஸ்டியாக் பாஷையில் 'இக்இ' மூத்தவன் என்றும் பீஷினிஷிய பாஷையில் 'உக்கோ' என்றும் அங்கேரிய மொழியில் 'அக்' என்றும் வழங்குகிறது என்று எடுத்துக்காட்டித் தன் கருத்தை நிறுவுகிறார். தமிழ் மொழியே எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கு அவர் முக்கிய ஆதாரமாகத் தமிழிலுள்ள பிரணவ மந்திரத்தைக் காட்டுகின்றார். வடமொழி தமிழிலிருந்து கடன் வாங்கிக் கொண்டது என்பதற்கு அவர் வின்சுலோ அகராதியின் முன்னுரையில் சான்று காட்டுகிறார்.

" While nearly, all vernacalars of India has been greatly en riched from sanscrit that wonderful language has condescended to borrow even from the Dravidian group of which Tamil is the oldest Comparative grammar instances 31 words to same kinds taken from Dravidian Tongues and 25 borrowed by both from some common source. He is of opinion that sanskrit derived its cerbral consonants (ட, ண,ள,ர) from Dravidian" அவர் சமஸ்கிருதம் சமஸ்கிருத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சொற்கள் 26. இந்தோ ஐரோப்பிய மொழிகளில் காணப்படும்

தமிழ்ச் சொற்கள் 101 எபிரேயு (ஈப்ரு மொழியில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் 31 சித்திய மொழியில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் 81 ஆகியவற்றை அவர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

நெடுங்காலத்தில் இந்தியா முழுவதும் ஒரு மொழி பரவியிருந்தது என்றும், அது வடநாட்டில் பாலி என்றும் தென்னாட்டில் தமிழ் என்றும் அழைக்கபபட்டது என்றும் அதிலிருந்து பிராகிருதம் வந்திருக்காலம் என்று பாலி, பிராகிருதம், தமிழ் முதலிய பல மொழிகளையும் ஆரியர்கள் தாங்கள் பயணம் செய்து வந்தபோது, வழியிலிருந்த மொழிகளையும் இணைத்து சமஸ்கிருதத்தை உண்டாக்கியுள்ளார்கள் என்றும் அவர் கூறுகிறார். பாலி என்றால் "மூலம்" என்றும் பிராகிருதம் என்றால் முதல் என்றும் சமஸ்கிருதம் என்றால் செம்மையாக்கப்பட்டது என்றும் அவர் அறிவிக்கிறார்.

அவர் 'திராவிடம்' என்பதிலிருந்த தமிழ் என்ற சொல் தோன்றியது என்ற கருத்தை மறுக்கிறார். இந்தச் சொல் மாற்றம் உண்மையானால், 'வி' என்ற எழுத்தின் கதி என்னவாயிற்று என்று வினவுகிறார்.

'தமி' என்ற முதனிலை, ஒப்பின்மை, தனிமை என்ற பொருளுடையது. தமிழ் என்றால் இனிமை, மதுரம் என்றும் பொருள்படும் என்று உரைக்கின்றார்.

தமிழே உலக முதல் மொழி என்று பாவாணர், ஞானகிரி நாடார், வேங்கட கிருஷ்ணன் ஆகியோர் அண்மைக் காலத்தில் வெவ்வேறு கோணத்திலிருந்து ஆய்ந்துரைத்தார்கள். இந்த உண்மையின் முன்னோடியாக விளங்கிய ஆபிரகாம் பண்டிதர் 1917 இல் பொற் கடகம் என்ற சிறப்புப் பெயர் பூண்ட கருணாமிந்த சாகரத்தில், இவை போன்ற ஆய்வு கருத்துகளை, அறிஞர்களுக்கு அறுசுவை விருந்தாக அளித்திருக்கிறார்.

# உலகமொழிகளில், தமிழ் மொழியின் தாக்கம்

ந. இராமையா, திருவள்ளூர்

1. உலகத்திலுள்ள மொழிகளெல்லாம், துரேனியன் (Turanian) செமிட்டிக்கு (Semitic), ஆரியம் (Ariyan) என முப்பெரும் பிரிவுகளாகக் கருதப்படுகின்றன. அவற்றுள், தமிழ், துரேனியன் பிரிவில் அடங்கும் என முடிவு கட்டினர். ஆனால், தமிழ், சித்தியக் குடும்பத்தில் (Sithian family) அடங்கும் என்பது கால்டுவெல்லின் (Rev Cauldwel) கருதுகோளாகும். ஆனால், இக்கருத்து, பின்னர் திருத்தப்பட்டு, தமிழ், திராவிட மொழிகள் குடும்பத்தின் தலைமை மொழியாகும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. உலகத்தில், ஏறக்குறைய நாலாயிரம் மொழிகள் வழக்கில் உள்ளன. இதில், பல கிளைமொழிகளும் அடங்கும். உலக மொழிகளிலுள்ள நாலாயிரம் மொழிகளில், தமிழ் மொழியின் கூறுகள் முன்னூறுக்கும் மேற்பட்டுள்ளன என மொழி நூல் அறிஞர்கள் முடிவுகட்டியுள்ளனர். தமிழ் நாகரிகம், உலகம் முழுவதும் பரவியதற்கு, இதுவும் ஒரு சான்றாக உள்ளது.

2. இந்தியாவில், ஆஸ்ட்ரிக்குக் குடும்பம் (The Austric family).

இந்திய – ஆரிய மொழிக் குடும்பம் ( Indo - Ariyan family )

தியத்திய – சீன – மங்கோலிய மொழிக் குடும்பம் ( Sino-Tbetan-Mangolid family)

திராவிட மொழிக் குடும்பம் (Dravidian family) என்ற நான்கு மொழிக் குடும்பங்கள் உள்ளன. (2)

3. இந்தியாவில், மொழிக் கணக்கெடுப்பின்படி, 179 மொழிகள், 544 கிளைமொழிகள் (ஆஸ்டிரிக்குக் கிளைமொழிகள் உட்பட) பேசப்பட்டுவந்தன. மேலும், காடுமலைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களால் பேசபட்டு வந்த மொழிகளின் விழுக்காடு 1.3% எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (3). இப்பொழுது, இது உயர்ந்திருக்கும்.

4. இனி, திராவிட மொழிக் குடும்பம் பற்றிக் கவனிப்போம். திராவிடம் என்றால் தெற்கு என்று பொருள், "சப்தகல்ப துருமா" என்ற வடமொழிக் களஞ்சியத்தில், திராவிடம் என்ற சொல் ஆளப்படுகிறது. தெற்கேயிருந்து வந்தது தெனுகு (தெலுங்கு) என்றும், தெளிவுடையது தெனுகு என்றும் ஒருவகைப் பெயர்க் காரணம் கூறப்படுகிறது. இன்றைய மலையாள வடிவெழுத்துகள், தமிழுக்கு இருந்த எழுத்துகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டன என்பது

உறுதிசெய்யப்பெற்ற உண்மையாம் (4). 1842 ஆம் ஆண்டில், பாசல் சமயவூழிய அச்சகத்தார் (Basel Mission Press), துளு மொழிக்குக் கன்டை எழுத்தைப் பயன்படுத்தினர்.

5. நாகரிகம் அடைந்த திராவிடப் பண்டிதர்கள், ஆரிய மொழியைத் தேவநாகரி எழுத்தில் எழுதியதோடு, கல்வியறிவில்லாத அம்மக்களுக்கும் படிப்பித்தனர் என மாக்ஸ்–முல்லர் கூறியுள்ளார் (5)

6. திராவிட மொழிகளிலுள்ள வேர்ச்சொற்கள் வெற்றொலிகள் அல்ல. அவையனைத்தும் பொருள் பொதிந்த மெய்மொழிகள் ஆகும். தமிழ்ச் சொற்களுக்கு மிக எளிதாகச் சமஸ்கிருத வேர்ச்சொற்களை மூலமாகக் காட்டுவது ஒரு வழக்கமாக உள்ளது. இதையொட்டியே, உலகம், கலை, நகுலம் போன்ற சொற்களுக்குச் சமஸ்கிருதத் தாது காட்டப்பெற்றன. யாழ்ப்பாண ஞானப்பிரகாச அடிகள், இச்சொற்களெல்லாம் தமிழ் வேர்ச்சொற்களே என்று ஆராய்ந்து காட்டியுள்ளார் (சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, முதல் மடலம்) (6).

7. கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பே பிராமி, எழுத்து உள்ளதை அஜிதேகர் குறித்துள்ளனர். பிராகிருத மூலவடிவம் கொண்ட "பிருகத்கதா" நூல் தொலைந்துபோய்விட்டது. ஆனால், காஷ்மீர் பண்டிதர்கள் எழுதிய சமஸ்கிருத நூல் கிடைத்துள்ளது. அதில், பிராகிருதம் ஒரு பைசாச (அ) நீச பாஷை எனக் கூறப்பட்டு, பின் தள்ளப்பட்டு, பேச்சு வழக்கற்று அழிந்துவிட்டது.

8. சங்ககாலக் கல்வெட்டுகள், பிராமி அல்லது தாமிழி (damily) அல்லது தமிழி எழுத்துகளால் ஆனவை. பிராமி இருவகைப்படும்; வடபிராமி, தென்பிராமி. இதனால்தான், அசோகன் காலமும், சங்ககாலமும் சமகாலம் எனக் கூறுகிறோம்.

9. பிராமி எழுத்துக்கும், மத்தியதரைக் கடலில் கிழக்கு ஓரங்களில் வாழ்ந்த பினீசியர் என்னும் பழைய மக்களின் (Phoenicicions) எழுத்துக்கும் உறவு உண்டு. பினீசிய மக்கள், பண்டைய நாளில், பெரும் கடல் வணிகர்களாக (Seetrader) இருந்தனர். இவர்கள், தமது எழுத்தை, இந்தியாவின்றும் பெற்றார்கள். பினீசியரிடமிருந்து கிரேக்கரும், கிரேக்கரிடமிருந்து ரோமரும், ரோமரிடமிருந்து மற்றைய ஐரோப்பிய இனத்தவர்களும் எழுத்தெழுதும் முறையைக் கற்றுக்கொண்டார்கள் (7).

10. முடிப்புரையாக, உலக மொழிகளில், தமிழ் மொழியின் கூறுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

அரபி மொழி

(அ) அரபியிலும் தமிழிலும் ஒரேவித ஞானம் பெற்றிருந்த சங்கைக்குரிய அமானி ஹறைத்து அவர்கள், ஏறத்தாழ

மூவாயிரம் சொற்கள், அரபியிலும் தமிழிலும் ஒரே விதமாக உச்சரிக்கப்படுவதைக் கண்டு தெளிவுப்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக, அரிசி, ஆபத்து, கைம்மை போன்ற சொற்களாகும் (8).

ஹங்கேரி

(ஆ) திராவிட மொழிகளில் இடம்பெறும் இறந்தகால இடைநிலையான + 'த்' என்ற உருபினை, ஹங்கேரிய (Hungary) மொழிகளில் இன்றும் காண்கின்றோம் (2).

ஆரியம்

(இ) மொழி நூல் அறிஞர் பர்ரோ (Dr. Burrow) அவர்கள், ரிக்கு வேதத்தின், மிகத் தொன்மையான பகுதிகளில் நுழைந்த திராவிடச் சொற்கள், ஆரியர்கள், வடமேற்கு இந்தியாவில் வாழ்ந்தபோதே நிகழ்ந்தது என்று வற்புறுத்திக் கூறியுள்ளார். ரிக்கு வேதத்தில், சிரா (Sirah) சிறை என்ற சொல், அணையைக் குறித்து வழங்கியுள்ளது. 'சிறை' என்ற சொல்லில் உள்ள தமிழ் மொழியின் சிறப்பெழுத்தான வல்லின 'ற'கரத்தை ஒலிக்க முடியாத ஆரியர் அதை மெல்லின 'ர'கரமாக்கிவிட்டனர். இது தொடர்பான விரிவான கட்டுரையைச் "செந்தமிழ்ச் செல்வி", நவம்பர் 1994 இதழில் காணலாம் (9). 'காசு' என்ற தமிழ்ச் சொல், வடமொழியில், 'கர்ஷா' என்று எடுத்தாளப்படுகிறது. மேலும், இச்சொல், தங்கம், வெள்ளி எடையையும் குறிக்கும்.

கன்னடம்

ஈ. அறிஞர் குசலப்ப கௌடா என்பவர், பாரதிதாசனின் "தலைவாரிப் பூச்சூடி உன்னை" என்ற தமிழ் பாடலைக் கன்னட மொழியில் மொழிபெயர்த்துள்ளார் (10).

படுகு மொழி

உ. படுகு மொழியில் முதற் குறள் எழுதப்பட்டுள்ளது (10).

பெரு மொழி

ஊ. பெட்டிகோன், சுண்ணாம்பு, கட்டுமரம், அய்யர், அமைச்சர் ஆகிய சொற்கள், அமெரிக்க நாட்டுப் பழங்குடி மக்களின் மொழிகளில் உள்ளன என்றும், அவர்களுடைய நாகரிகம் 'ரிசக்' என்று (11) குறிக்கப்பெறுவதும் பெரு(Peru) என்ற

பெருமைக்குரிய தமிழ்ச் சொல்லே என்றும் காட்டியுள்ளனர் (12).

ஜப்பானிய மொழி

எ. அறிஞர் சுசுமு ஒனோ (Dr. Susumu Ohno), 162 தமிழ்ச் சொற்களைத் தேர்ந்துதெடுத்து (13). பழைய ஜப்பானிய மொழியோடு ஒலிநயம், மொழிநலம் காட்டி ஒப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, கடி (T)-To bite, gnaw ; Kadi - ru(J) to gnaw, eat, nittle போன்றவையாகும். உலக மொழிகளில், தமிழ் மொழியின் கூறுகளால் ஜப்பானிய மொழியும் பயன் அடைந்துள்ளது என்பது இதனால் நன்கு விளங்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களில், வடமொழித் துறை நிறுவப்பட்டு, அம்மொழியின் பழமை, கலை, காவியம், நாடகம், நாட்டியம், மொழி வரலாறு, மொழி இலக்கணம், இலக்கண வரலாறு, பிற மொழிகள் வடமொழியால் வாழ்வுபெற்ற வரலாறு, பல அகரமுதலிகள் (பர்ரோ – எமனோ) முதலியன ஆராயப்பட்டு, மிகப்பல நூல்கள் வெளிந்துள்ளன.

அதுபோன்று, தமிழ் மொழிக்கும், தமிழ்த் துறை இல்லாத நாடுகளில் தமிழ்த் துறையை ஏற்படுத்தி, தமிழின் பழமையையும் புதுமையையும் நடுநிலை நின்று ஆய்வுசெய்தால் தமிழ் மொழியின் விடுபட்டுப்போன பல கூறுகள் வெளிவரும் என்பது உறுதி. வெல்க தமிழ்!

மேற்கோள் நூல்கள் :-


1. "தேநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்" – புலவர் இரா.இளங்குமரன் – 1985.

2. "திராவிட மொழிகளின் ஒப்பாய்வு" (ஓர் அறிமுகம்) – டாக்டர் ஜி. ஜான் சாமுவேல். 1978.

3. "Languages and the Lingustic Problems"- Suniti Kumar Chatlerji Oxford Pamphlets, No. 15-1943.

4. "கால்டுவெல் ஒப்பிலக்கணம் – முதற்பகுதி", மொழிபெயர்ப்பு கா.கோவிந்தன். கழகம் மு.ப. டிசம்பர் 1955.

5. "வரலாற்றில் இந்து மதம் – புரட்சிதாசன் 1989.

6. "தமிழ்த் தொண்டர்கள்" (முற்றிப் பழுத்த மொழி வல்லுநர்) எம்.ரம்போலா– மாஸ்கரேனஸ், 1965.

7. "நமது தாய்மொழி" ந.சி. கந்தையா பிள்ளை 1948.

8. "பசுங்கதிர்ப் பல்சுவை விருந்து 1990 தமிழே முதல் மொழி", பக்கம் 108.

9. "செந்தமிழ்ச் செல்வி", நவம்பர் 1994, "கற்சிறையும் அரப்பாவு" திரு.பி.எல்.சாமி,இ-ஆ.ப.(ஓய்வு).

10. "புதுவெள்ளம்" – சிற்பாசிரியர் பார்த்தசாரதி, ஜனவரி 1991.

11. " The Maya Civilization- Prof. Michacl coe - Thitrd Ed 1984

12. "தென்னமெரிக்காவில் சோழர்கள்" மீ. மனோகரன் (1976).

13. "புலமை" – ஏப்ரல் 1991.

# சிந்து சமவெளி எழுத்தின் மொழியும், அதன் இலக்கண வழிமரபும்

## (ஆங்கில மூலம் : பேரறிஞர் சுப்பிரமணிய மலையாண்டி – தமிழாக்கம் ; ஊ.கொற்றன்காரி)

அறிமுகம்.

தொன்முது இந்தியக் கல்லெழுத்துகளை (Proto - Indian Texts) படிப்பதற்கு, இந்தியாவில், பல முயற்சிகள் நடந்துவந்திருக்கிருக்கின்றன; உலகத்திலும் நடந்துவந்திருக்கின்றன. ஆனால், ஆராய்ச்சியறிஞர்கள், ஒவ்வொரு கல்வெட்டை படிக்கும்ப்போதும், அடிப்படையில் மாறுபடுகின்றனர். இதுபோலவே, சிந்து சமவெளி எழுத்து அல்லது வரிவடிவத்தைப்(Indus script) படிக்கும்போது, அதன் மொழியையும் இலக்கணக் கட்டுக்கோப்பையும் கண்டு, நேர்முரணான கருத்துகளையே அறிஞர்கள் வெளியிட்டுவருகின்றனர். நானும், ஆராய்ச்சியாளன் என்கிற முறையில், சிந்துவெளி வரிவடிவின் வரியன்; ஒலியன் அமைப்பை (Grapheme - phoneme indentification)ச் சோதித்து பார்த்தேன். இதற்காக நான், தொடர்ந்து மிகவும் துன்பகரமான முயற்சியில் ஈடுபடவேண்டியிருந்தது. ஆனால், கடைசியில், சிந்துவெளி எழுத்தை, என்னால் கண்டுபிடிக்க முடிந்தது.

பன்னாட்டு ஆராய்ச்சியறிஞர்கள், இந்தச் சிந்துவெளி எழுத்தைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகளைப் பின்னே சுருக்கமாகத் தந்து, பிறகு, நான் கண்டுபிடித்த முடிவைச் சுருக்கமாக வழங்குகிறேன்.

திருவாளர்கள் கேடு, ஸ்மித்து (Mrs. Gadd and Smith) என்ற அறிஞர்கள், சிந்துவெளி வரிவடிவைத் திராவிட மொழியின் (Dravidian language) தொடக்கநிலை என்று முடிவுக்கு வந்து, ஆனால், அதில் உள்ள மூன்று என்ற குறி ஒரு சமஸ்கிருத சொல்லாகும் என்று கருத்துக் கூறினர். ஆனால், இந்தக் குறி எப்போது, என்னால், 'வழுதி' என்று படிக்கப்பட்டிருக்கிறது. 'வழுதி' என்பது, பாண்டிய அரச மரபினரின் தொடர்ந்து வரும் ஒரு பெயராகும்.

அருள் திரு ஈராஸ் பாதிரியார், பேராசிரியர் அஸ்கோ. பர்போலா, பேராசிரியர் டாக்டர் பெண்டிட்டி, ஆல்ட்டோ, திரு. அலெக்சாண்டர் கொந்தரதோவ், பேராசிரியர் ஜி.ஏ. அலெக்ஸிஹீவ், பேரறிஞர் நிக்கீட்டா, குரோவ், (Rev. Fr. Heras, Prof.Asko Parpola, Prof.Dr. Pentti Aalto, Thiru. Alexandar Kontrator, Prof. G.A.Alexeheev, Dr.Nikita Gurov) மேலும் பலரும், மேற்படி சிந்துவெளி எழுத்தைத் தொன்முது திராவிடம்

(Proto-Dravidian) அல்லது தொன்முது இந்தியம் (Proto - Indian) என்றும், கூறுகிறார்கள். அது, இந்திய – ஐரோப்பியமோ (Indo - Europian) அல்லது இந்திய வேதகாலத்துக்கு முற்பட்ட மொழியோ அல்ல என்றும், அதனுடைய இலக்கண அமைப்பு ஒட்டுநிலையாகும் (Agglutinate) என்றும் அவர்கள் உரைத்திருக்கிறார்கள்.

செக்கோசுலோவேக்கிய ஆராய்ச்சியறிஞரான பேராசிரியர் ஹிரோக்னாஸ் (The Checkoslovakian Scholar Prof.Hrognos) என்பவர், ஹிட்டைட்டிய ஆராய்ச்சியின் (Hititology) தந்தை என்று அழைக்கப்படுபவர் ஆவார். அவர், சிந்துவெளி எழுத்தின் மொழி தொன்முது இந்திய – ஐரோப்பியம் (Proto - Indo European) என்று வாதிடுகிறார். ஃபிரஞ்சு ஆய்வறிஞரான திரு ஏ. பென்வெனிட்சே (Mr. A. Benventise) என்பவரும் இதே போல் கருதுகிறார்.

பேரறிஞர் எஸ். இரங்கநாதராவ் (Dr.S.Ranganatha Rao) என்கிற ஆராய்சியாளர், இப்போது ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கி, சிந்துவெளி எழுத்து வேதகாலத்துக்கு முற்பட்டது ( Pre - vedic) என்றும். அது தொன் முது இந்திய – ஐரோப்பியம் (Proto - Indo - European) என்றும், வற்புறுத்துகிறார். அவருடைய கோட்பாட்டின்படி, மேற்படி எழுத்தில் மூன்று நூதனக் கூறுகள் உள்ளன என்றும், அதனுடைய சொல்லமைப்பு ஒட்டு நிலையாக இல்லாது சொல்மாறு நிலையாக உள்ளது (Not agglutinate but inflexional) என்றும் புகலுகிறார். திருமிகு. ஐராவதம் மகாதேவன் (Thiru Iravadam Mahadevan) என்கிற தமிழ்நாட்டு ஆராய்ச்சியறிஞர், முதலில், சிந்துவெளி எழுத்து ஒரு தொன்முது திராவிட மொழியைக் குறிக்கிறது (Proto - Dravidian language) என்று கூறிவிட்டார்; பிறகு, அவருடைய மேல் வளர்ந்த ஆராய்ச்சியில், மேற்படி சிந்துவெளி எழுத்து இப்பொழுது இறந்துவிட்டது என்றும், எனவே, அதனைத் தற்காலத்திய மொழிகளோடோ, பழங்காலத்திய மொழிகளோடோ ஒப்பிடமுடியாது என்றும், இந்தக் கருத்தையே சில சோவியத்து இந்தியவியலாளர்கள் (Soviet Indologists) கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் சொல்கிறார்.

கடந்த *11-1-1978*ந் தேதி, சென்னை அருங்கட்சியகக் கலையரங்கில் (Madras Musium Theatre) நடந்த இந்தியக் கல்வெட்டியல் கழக 4ஆவது பேராயத்தில் (4th Congress of the Epigraphical Society of India), திருமிகு ஐராவதம் மகாதேவன் அவர்களின் சிந்துவெளி நாகரிக எழுத்துகள் பற்றிய முடிவுகளுக்கு, நான், என் கருத்துகளை வழங்கினேன். சிந்துவெளி வரிவடிவை நான் கண்டுபிடித்திருக்கிறேன் என்றும், அக்கல்லெழுத்துகளின் வாசகங்கள் செந்தமிழிலிலேயே (Pure Tamil ) ஆகியிருக்கின்றன என்றும், சில திராவிடவியல் அறிஞர்கள் – கீழையியல் அறிஞர்கள் கூறுவதுபோல, அது வேதகாலத்துக்கு முற்பட்ட சமஸ்கிருதத்தைச் சார்ந்தது அல்ல என்றும் அழுத்தம் திருத்தமாக உரைத்தேன்.

இப்போது, மேற்படி என் கருத்தைச் சுருக்கமாகவும், வேண்டும்போது சிறிது விரிவாகவும், சிந்துவெளி நாகரிக எழுத்தின் மொழியும், அதன் இலக்கண வழிமரபும், என்கிற தலைப்பில், இங்கே கொடுக்க விரும்புகிறேன்.

கீழே வருபவை, என்னுடைய ஆராய்ச்சியில், சிந்துவெளி நாகரிக மொழியின் அடையாளத்தையும், அதன் இலக்கண வழிமரபையும் ஓரளவு தெளிவாகக் குறிப்பிடும் என்று நம்புகிறேன்.

## சிந்துவெளி எழுத்தியல்: (Indus orthography)

சிந்துவெளி எழுத்துமுறையில், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன என்னும் பதினெட்டு உயிர்மெய் எழுத்துகளும் ; குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்று சார்பெழுத்துகளும் உள்ளன.

இந்த முறைமைதான் (System), தொல்காப்பியர் யாத்த 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூலிலும் அமைந்திருக்கிறது. தொல்காப்பியத்தில் வருகிற எழுத்துப் பாகுபாடும், எழுத்து எண்ணிக்கையுமே, சிந்துவெளி வரிவடிவுகளிலும் காணப்படுகின்றன. ஆனால், தமிழ் பிராமி (Tamil Brahmi) என்று அறியப்படும் சிந்துவெளி எழுத்துமுறையிலும், மூன்றாம் சங்க இலக்கிய எழுத்துமுறையிலும், சார்பு எழுத்துகள் மூன்றிற்கும் (Three dependent phones), இரண்டு இணையுயிர்களுக்கும் (Diphthongs ஐ, ஔ) தனியாக ஒலிக்குறிகள் ( Letters) கிடையா. ஆனால், சிந்துவெளி வரிவடிவில் இச்சார்பெழுத்துகளுக்கும் இணையுயிர்களுக்கும் தனி வரியன்கள் (Specific gaphemes) இருக்கின்றன. இவை அதிகமாக காணப்படாவிட்டாலும், கூர்ந்து நோக்கினால், ஆங்காங்கே இருப்பது தெரியவரும்.

## இலக்கணக் கூறுகள் (Grammatical Features)

பால் வேறுபாடும் (Gender), திணை வேறுபாடும் (Life), எண் வேறுபாடும் (Number), பிற இலக்கணத் தன்மைகளும், சிந்துவெளி மொழியைச் செந்தமிழ், என்றே வரையறுக்கின்றன.

ஒருமை, ஆண்பால், உயர்திணைப் பெயர்சொற்கள் யாவும், 'அன்' என்கிற விகுதிலேயே முடிகின்றன. உதாரணமாகப் பின்வருவனவற்றை காண்க: (1) சோழன், (2) பரதன், (3) கோடன், (4) பாண்டியன், (5) தாபதன், (6) மாடலோன், (7) கிழான், (8) யாழன், (9) பூப்பன். மாடலோன் என்பதில் மட்டும், 'அன்' விகுதி 'ஆன்' விகுதியாகியிருக்கிறது. என்றாலும், இதுவும், தொல்காப்பியம், நன்னுல் ஆகிய முக்கிய இலக்கணங்களுக்கு ஒத்தே அமைந்திருக்கிறது.

உயர்திணைப் பன்மைச் சொற்கள் 'அர்' அல்லது 'ஆர்' என்னும் விகுதிகளைக் கொண்டு முடிகின்றன. பெண்பால், ஒருமை, உயர்திணைச் சொற்கள் அதிகமாக இல்லாவிட்டாலும் சில இடங்களில், வரவே செய்கின்றன. அவை, (1) பரதத்தி, (2) கிழானத்தி, என்று தமிழ் வழக்குப்படியே வருகின்றன.

## உயிர்மெய்யெழுத்துகளுக்கிடையே உயிர்ரெழுத்து வருதல் (Anaptyxis)

சில சிந்திவெளி வாசகங்களில், இரண்டு உயிர்மெய் எழுத்து களுக்கிடையே ஓர் உயிர் எழுத்து வருகின்ற புதுமையைக் காண முடிகின்றது. அதற்கு, ஆங்கிலத்தில், 'Anaptyxis' என்று பெயர். அவற்றை உச்சரிப்பது சிறிது கடினந்தான். உதாரணமாக, வள் + உ + அன்.

## இடையெழுத்து விடுபாடு (Syncope)

மேலே சொன்னதிற்கு நேர்மாறாகச் சில இடங்களில், சிந்துவெளி எழுத்தில், இடையுயிர் (Medial vowel) விடுபட்டிருக்கிறது. உதாரணமாக, 'வழுதி' என்பது 'வழ்தி' என்று இருக்கிறது.

## அசை மறைவு (Haplology)

ஒரு சொல் அல்லது சொற்றொடரில் வரும் இரண்டு அசைகளில், ஒன்று மறைந்துவிடுவதற்கு, 'Haplology' என்று பெயர். உதாரணமாக, 'ஆதன் தந்தை' என்பது 'ஆந்தை' என்றும் 'பூதன் தந்தை' என்பது 'பூந்தை' என்றும் வருகின்றன. இதறனப் பிற்கால இலக்கணியான பவணந்தியார் (The Grammarian Pavanandiar), 'மரூஉ' என்று அழைக்கிறார். இவ்வழக்கு, வேறுசில தொன்முது இந்தியக் கல்லெழுத்துகளிலும் காணப்படுகின்றன

## இறுதியுயிர்மெய்யெழுத்து உயிரெழுத்தாதல் (Final consonant becoming vowel)

ஓர் இடத்தில், ஒரு சொல்லில் உள்ள 'ஆய்' என்கிற முடிவு, 'ஆஇ' என்று மாறுகிறது. இச்சொல்லில் உள்ள யகர ஒற்று இகர எழுத்தாக மாறுவது, இங்கே உள்ள ஒரு நூதனம்.

## டண்ணகரம் றன்னகரமாகிறது (nn becoming n)

ஒரு சொல்லில், டண்ணகர 'இண்' என்கிற எழுத்து, றன்னகர 'இன்' என்கிற எழுத்தாக மாறியிருக்கிறது. உதாரணம்: வாளுணா என்பது வாளுனா என்று ஆகியிருக்கிறது. இன்னோர் இடத்தில், ஒரு சொல்லில், 'அண்ணன்' என்பது ' அண்ணா' என்றும், 'பாண்டியன்' என்பது 'பாண்டியா' என்றும் வருகின்றது. இவையும் அக்காலத்து நூதனங்களே.

## சமுதாயவியல் (Sociology)

ஹரப்பா முத்திரை ( Harappan seal) எண் 52-ல் உள்ள வாசகம், ஆண்ட' என்று இருக்கிறது. மொகஞ்சதரோ (Mohenjo - daro seal ) முத்திரை எண் 48-ல், ஒரு வாசகம், பாண்டியன் தந்த 'கோ' என்று வருகிறது. இப்படி, ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் (சிந்து சமவெளியில்) உள்ள பெரும்பான்மையான முத்திரைகளைப் படித்ததில், அக்காலத்து (சுமார் கி.மு. ஐந்தாயிரம்) சிந்துவெளி நிலப்பகுதிகளில், சோழபாண்டிய மரபினரே ஆட்சி புரிந்துவந்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரியவருகிறது. இந்த முத்திரைகள் யாவற்றையும், தொல்காப்பிய இலக்கணத்தின் துணை கொண்டு, செவிதகணப் படித்துவிடமுடியும். ஒருசமயம் ஹரப்பாவாசிகள் (The Harappan's), மொகஞ்சதரோவாசிகளின் (Mohenje - Daros) பசுக்கூட்டங்களை (ஆனிரைகளை)க் கவர்ந்துகொண்டிருக்கிறார்கள். போருக்குரிய தொடக்க நிலையான இதனைத் தொல்காப்பியர், 'ஆதந்து ஓம்பல்' என்று கூறுகிறார். 'ஆதந்த' என்கிற இந்தச் சொல் ஹரப்பா முத்திரை எண் H – 52 – ல் காணப்படுகிறது. இதனைப் பார்க்கும்போது தொல்காப்பிய இலக்கண மரபு, சிந்துவெளி நாகரிகக் காலத்தில பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இன்னோர் இடத்தில், அக்காலத்து ஒரு சோழமன்னன், தன்னைப் 'பாண்டியன் தந்த கோ' என்று அழைத்துக்கொள்கிறான். இதற்குப் பொருள், சோழன், பாண்டியனை வென்றிருக்கிறான் என்பதே. 'பாண்டியன் தந்த கோ' என்றால், 'சோழனுக்கு அடங்கி, அவனை அரசனாக ஏற்றுக்கொண்ட பாண்டியன்' என்பதாகும்.

## வரிவிதிப்பு (Taxation)

தமிழகச் சங்ககாலத்திலும், சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்திலும், தமிழ் அரசர்கள், மக்களிடமிருந்து, அவர்கல் சம்பாதித்த வருமானத்தில், ஆறில் ஒரு பங்கை (one sixth), வரியாக வசூலித்தனர். ஆனால், சிந்துவெளி நாகரிகக் காலத்தில், வடநாட்டில் வாழ்ந்த தமிழ் அரசர்கள், மக்களிடமிருந்து, 10-ல் ஒரு பாகத்தையை (One tenth) வரியாக வசூலித்தனர். இது, அங்கே கிடைக்கும் கல்லெழுத்துகளிலிருந்து தெரியவருகிறது. மேலும், 'திருமா உண்ணி ', 'பழன உள்' என்றும் சொற்கள், சிந்துவெளிப் பகுதி எடைக்கற்களுக்கும் அளவுகளுக்கும் (Weights and measures) வழங்கப்படிருக்கின்றன என்பது மேலும் உள்ள சில முத்திரைகள் மூலம் தெரியவருகிறது.

இப்படியாக, 'வரியன்' மூலமாகவும், 'ஒலியன்' மூலமாகவும், வாக்கிய அமைப்பு மூலமாகவும் – எப்படிப் பார்த்தாலும், சிந்துவெளி நாகரிக மொழி 'செந்தமிழாகவே', எனக்குத் தோற்றமளிக்கிறது. தொல்காப்பியத்திற்கும், அதற்கு முந்தியும் பிந்தியும் இருந்த இலக்கண நூல்களுக்கும் முற்றிலும் பொருந்துகிற விதத்திலேயே, அங்குக் கிடைத்துள்ள கல்லெழுத்துகள் காட்சியளிக்கின்றன.

இதனால், சிந்துவெளி நாகரிகம் (Indus Valley civilisation), ஏதோ ஒரு தனியான வடவிந்தியத் தமிழ்ப் பண்பாட்டுப் பகுதி (An isolated Tamil Cultural area) என்று சொல்லிவிடக்கூடாது. அது, அக்காலத்தில் (சுமார் கி.மு. ஐயாயிரம் ஆண்டுகளில்) திராவிட இனமான (Dravidian race) தமிழினமும், தெலுங்கினமும், தென்னிந்தியாவில் வைகைப் பள்ளத்தாக்கிலும் (Vaigai Valley of Tami Nadu), துங்கபத்திரைப் பள்ளத்தாக்கிலும் (Tungabhadra Valley of Andhra) வளர்ந்து வந்திருந்த பண்பாட்டின் மறுபதிப்புகளே ஆகும்.

பேராசியர் வையாப்புரி பிள்ளை (Prof.S.Vaiyapuri Pillai), தம் 'காவிய காலங்கள்' என்னும் ஆராய்ச்சி நூலில், 'திருமா உண்ணி' என்று நற்றிணையில் அழைக்கப்பட்டவளே, பின்னால் சிலப்பதிகாரத்தில் கண்ணகி என்று வந்திருக்கிறாள் என்று ஒரு கருத்தைக் கூறுகிறர். இதனை, நான், தென்னாட்டில், என் அலுவற்பயணம் ஒன்றின்போது அறிய முடிந்தது. தென் கன்டை நாட்டில் உள்ள மங்களூர் என்னும் பட்டணம், கண்ணகி தொடர்புடையது என்பது சிலருக்கே தெரியும். அங்கு, இன்னும் உள்ள மங்கலத்தேவி கோவில் (Mangala Devi Temple) சேரன், செங்குட்டுவனால் முதன்முதலில் கட்டப்பட்டது என்று ஓர் அழுத்தமான வழக்கு உள்ளது மங்களூரைத் தாண்டிவந்தால், தமிழ் நாட்டு, மதுரை மாவட்டத்து, உத்தம பாளையம் வட்டத்துக் கூடலூர் (Kudalur)என்னும் ஊரை அடையாலாம். இந்த கூடலூர், இப்போது, மலையாள நாட்டில் சேர்ந்துள்ளது. இந்த ஊரின் ஒரு தெருவுக்குத் "திருமாவுண்ணி" தெரு என்ற பெயர் இருந்ததை, **1973**ஆம் ஆண்டு, நான் அங்கே சென்றபோது, கண்டேன். இந்தப் பெயர் வருவாய்த் திணைக்கள ஆவணங்களிலும் (Revenue Records), நகரமைப்புத் தரைப் படத்திலும் (Town Planning Maps) இருந்ததை, நான் கவனித்தேன். ஆனால், இப்போது அந்தத் தெருவின் பெயரே மாற்றப்பட்டிருக்கிறது.

இந்த 'உண்ணி' என்கிற பெயர், மிகப் பழமையான தமிழ் நூல்களிலும் வரலாறுகளிலும் உள்ள ஒரு பெயராகும். இந்தப் பெயர், வடநாட்டு மெகஞ்சதரோ முத்திரை எண் 549–ல் இருப்பதை, நான் நன்கு காண முடிந்தது. இது ஒன்றே, இந்தியாவின் தென்மூலையில் இருக்கும் தமிழ்நாட்டுக்கும், இந்தியாவின் வடமூலையில் இருக்கும் சிந்துவெளிப் பிரதேசத்துக்கும் உள்ள தொடர்பை அழுத்தமாகப் புலப்படுத்தும் ஒரு சான்றாகும்.

இங்ஙனம், சிந்துவெளி நாகரிக மொழியும் எழுத்தும், பழந்தமிழ் என்னும் தொல்தமிழே (Ancient Tamil)என்றும், தொல்காப்பியம், அதற்கு முந்திய தமிழ் இலக்கணங்களின் மரபுவழியே (heritage) சிந்துவெளியின் மரபுவழியாக இருந்துதிருக்கிறது என்றும், என்னால் உறுதியாகக் கூறமுடிகிறது.

# அமெரிக்க பண்டைய நாகரிகங்களில் தமிழ் மொழி. பண்பாடு ஆகியவற்றின் கூறுகள்

## (பி. இராமநாதன் எம்.ஏ.பி.எல். வழக்குரைஞர்]

மாந்தன் என்று குரங்கினத்திலிருந்து பிரித்துக் கூறத்தக்க உயிரியாகிய "தென்கோளக் குரக்குமாந்தன்" (Homo Australopithecus) தோன்றியது இற்றைக்கு ஏறத்தாழ 20 இட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும். அதனினும் திருந்திய "நிமிர்ந்த மாந்தன்" (Homo Erectus) தோன்றியது இற்றைக்கு 10 லிருந்து 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர். அவ்வினம் மேலும் வளர்ச்சியடைந்து ஏறத்தாழ ஒரு இலட்சம் அல்லது 50,000 ஆண்டுகட்கு முன் இக்கால மாந்தனின் நிலையை அடைந்தது, அக்கால கட்டத்தில்தான் மொழி தோன்றியிருக்க வேண்டும்[1] இவையனைத்தும் ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்கள் அடங்கிய "பழைய உலக" பகுதியில்தான் - குறிப்பாக ஆப்பிரிக்கா இந்தியாவில் நடந்திருக்க வேண்டும். மொழி தோன்றியபின்னர் சிலகாலம் கழித்து அதாவது தற்போதைக்கு சுமார் 40,000 - 35,000 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தர் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறியிருக்க வேண்டும். ஆசியாக் கண்டத்தின் வடகிழக்குக் கோடியிலிருந்து பேரிங் நீரிணைப்புப் பகுதியைத் தாண்டி அலாஸ்கா தீபகற்பம் வழியாக அவர்கள் சென்றிருக்க வேண்டும். அக்காலத்தில் கடல் மட்டம் இப்பொழுது உள்ளதைவிட சில நூறு அடிகள் குறைவாக இருந்திருக்க வேண்டுமாகையால் பேரிங் நீரிணைப்புப் பகுதி அப்பொழுது தரையாகவே இருந்திருக்கும். மேற்சொன்னவெல்லாம் மேனாட்டு அறிஞர்கள் அனைவரும கருத்து வேறுபாடு இன்றி ஏற்றுள்ளவையாகும்.

---

1. Morris Swadesh: The Origin and Diversification of Language; Ed: Joel Sherzer; Routledge and Kegan Paul; London 1972 pp xviii; 350

"மெல்" (Fine; Tender); "முன்" (Think) போன்ற சொற்கள் உலகெங்கிலுமுள்ள பலமொழிகளில் அப்பொருளில் வழங்குவதை சுவாதெச குறித்துள்ளார். அண்மைச் சுட்டாக இகரமும் சேய்மைச் சுட்டாக அகரமும் பலமொழிகளிலும் வழங்குவதையும் கூறியுள்ளார்.

---

2. வட, தென் அமெரிக்கக் கண்டங்களில் சுமார் கி.மு. 35,000 இல் குடியேறிய மக்கள் கி.பி. 1492 இல் கொலம்பஸ் - ஆல் கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பியர்களுக்கு ("செவ்விந்தியர்கள்" என்ற பெயரில்) தெரிய வருவதற்கு முன் உள்ள கழிநெடுங்காலமும் "பழைய உலகத்தோடு" யாதொரு தொடர்பும் இன்றி இருந்தனரா? ஆம் யாதொரு தொடர்பும் இன்றியே வாழ்ந்து தாமாகவே மாயா மெக்சிகோ, பெருநாகரிகங்களை அவர்கள் வளர்த்துக் கொண்டு இருக்கவேண்டும் என்பது பெரும்பாலான மேனாட்டறிஞர் கொள்கை. அவர்கள் " தனிவளர்ச்சிக்கொள்கையினர்" (isolationists) எனப்படுவர். மாறாக கொலம்பசுக்கு முந்திய 5000 ஆண்டுகளுக்குள் அமெரிக்கர்களுக்கும் ஆசியநாகரிகங்களுக்கும் ஓரிரு முறையாவது கடல்வழித்தொடர்புகள் இருந்திருக்கவேண்டும் என்னும் " நாகரிகப்பரவல் கொள்கையினர்" (diffusionists) மேனாட்டறிஞர்களில் சிறுபான்மையினரே. ஹைன்கெல்ட்ர்ன் (Heine gelderne); ஜேம்ஸ் பெய்லி போன்றவர்கள் இந்திய நாகரிகத்துடன்

தொடர்பு இருந்திருக்கலாம் என்பவர்கள்.[2] தோர் ஹெயர்டால் (Thor Hayerdahl) பண்டைய நாகரிகங்கள் கடல் மூலமாகவே பரவியிருக்க வேண்டும் என்றும் இத்தகைய கடல் வழிப் பரவலுக்குக் காரணமான பயணங்கள் பின்வருமாறு – அதாவது, சுமேரியா, எகிப்திலிருந்து – மேற்காக ஜிப்ரால்டர் நீரிணைப்பு வழியாக அட்லாண்டிக் பெருங்கடலைத் தாண்டி மத்திய அமெரிக்காவுக்கும்;

தென் அமெரிக்காவிலிருந்து – மேற்காகத் தென்பசிபிக் பெருங்கடலைத் தாண்டி ஈஸ்டர் தீவு மற்றும் பிற பசிபிக்கடல் பாலினேசிய (Polynesia) தீவுகளுக்கும்;

இந்தோனேசியாவிலிருந்தும் சீனத்திலிருந்தும் – கிழக்காக வடபசிபிக் பெருங்கடலைத் தாண்டி ஹவாய்த் தீவுகள் வழியாக வடஅமெரிக்காவின் கலிபோர்னிய கடற்கரைப் பகுதிக்கும்; **இப் பயணங்களுக்கு ஏற்றதாக உள்ள கடல் நீரோட்டங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு இருக்கவேண்டும் என்றும்வ** நிறுவப் பலபுத்தகங்கள் எழுதியு ள்ளார். அது மட்டுமல்ல. நாணல் பு ற்கட்டுகளைக் கட்டுமரம் போல் கட்டி அமைத்த பாய்மரக்கலங்களில் (Reed Boats) தானே இப்பயணங்களைச் செய்து காட்டியும் உள்ளார். தென் அமெரிக்காவில் தோன்றிய பயிர்களான தென்னை; சர்க்கரை வள்ளிக்கிழங்கு; மிளகாய் முதலியவை கடற்பயணிகள் வழியாகத்தான் முதலில் பசிபிக் தீவுகளுக்கும் பிறகு அங்கிருந்து இந்தோனேசியா, இந்தியாவிற்கும் பரவியிருக்க வேண்டும் என்பது ஹெயாதால் கருத்து. (தெற்கிலிருந்து வந்ததனால தெங்கு, தென்னை என்று பெயர்பெற்ற தென்னை மரமானது சங்க இலக்கியத்தில் பிரபலமாகாமை காண்க.) சர்க்கரை வள்ளிக்கிழங்குக் பெருநாட்டு கொஷீவா மொழியிலும், பசிபிக் தீவுகளின் மொழிகளிலும் 'குமரா' என்பதே பெயர்.

3. மெக்சிகோ, பெருநாட்டு நாகரிகச் சின்னங்களை நேரில் சென்று கண்டுவந்தவரான சாமன்லால் "இந்து அமெரிக்கா" என்ற நூலை 1940–ல் எழுதியுள்ளார்.[3] 1970 – ல் தமது " ஆரிய தரங்கிணி" யில் ஏ. கல்யாண ராமன் இந்த நாகரிகங்களின் இந்தியக் கூறுகளைப் பற்றி விவரித்துள்ளார்.[4] 1976ல் மீ. மனோகரன் "தென் அமெரிக்காவின் சோழர்கள்" என்ற நூலில் தமிழர் நாகரிகத்துடன் இயல்புடைய இன்கா நாகரிகக் கூறுகளை விரிவாக விளக்கியுள்ளார்.[5] ஆயினும் பிற்காலச் சோழர் காலத்தில் பெருநாட்டுடன் கடல்வழித் தொடர்பு இருந்திருக்கும் என அவர் முடிவுசெய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் தரப்படவில்லை.

---

2. James Bailey· The god Kings and the Titans (The new world ascendancy in ancient times); Hodder and Stoughton; London; 1970 pp 350

Thor Heyardahl : Early man and the Ocean (The Beginnings of navigation and seaborne Civilizations) 1978; Allen and Unwin; London; pp 392

3. Chaman Lal: Hindu America; I Edn 1940; II Edn 1966; zodiac press; Delhi pp XXIV:216

4. Kalyanaraman : Aryatarangini Vol II; Asia Publishing House; 1970; pp XL VIII; 794 (See Chapters lx and x: pp 452-704)

5. மீ. மனோகரன் : தென் அமெரிக்காவின் சோழர்கள். திருவடிப் பதிப்பு; மதுரை – 13 1976 பக்கங்கள் 215

4. கொலம்பசுக்கு முந்திய அமெரிக்காவின் வரலாற்றுக் கால நாகரிகங்கள் பற்றியும் அவற்றை வஞ்சகத்தாலும் கொடுமையாலும் ஸ்பெயின் நாட்டவர் கி.பி.16 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அழித்தொழித்ததையும் சற்று காண்போம்.

5. வட அமெரிக்காவில் மெக்சிகோ பகுதியில் ஓல் மெக்கர் (Olmechs), தொல்தெக்கர் (Toltechs,) ஆகிய நாகரிகங்களுக்குப் பின் தொல்தெக்கரை வென்று கி.பி. 1345-ல் அஸ்தெக்கர்கள் (Aztechs) தங்கள் ஆட்சியை நிறுவினர். தற்பொழுது மெக்சிகோ சிட்டி என்று அழைக்கப்படும் தெனோச்தித்லான் (Tenochtitlan) அவர்கள் தலை நகர். Tenochtitli என்பது சப்பாத்திக்கள்ளி (Prickly Pear); எனவே கள்ளியூர் என்பது பொருள். அஸதெக்கர் மொழி "நகுவாதில்" (Nahuatl). அம்மொழியில் எழுதப் படும் எந்த நூலையும் ஆய்வு செய்து ஏற்புத்தருவதற்கு சஙகம போன்று ஓர் அமைபபு இருநதது போர்க்குணம மிக்க அஸ்தெக்கர்கள் கோடைகாலத்தில் பல்வேறு பூக்களை மிலைந்துகொணடு போர்களில ஈடுபடுவது வழககம். போரில கைதிகளைப் பிடிப்பதிலேயே கவனம செலுத்திப பிடிபட்ட கைதிகளின் நெஞ்சாங்குலைகளை அறுத்தெடுத்து நரபலிகொடுப்பது அவர்கள் வழககம ஹுத்சாலோ பொகுத்லி (Huitzalo pochtli) என்னும் போர்க்கடவுள் கோயில் திறக்கபபட்ட ஒருநாளில் மட்டும் 20,000 பேர் நரபலியாயினர். காது களில் பெருந்துளைகள் போட்டுக் குழை 'அணிதல; தாயக்கட்டம் விளை யாடுதல், ஞாயிறு வணக்கம், அன்றாடசந்தை, குருகுலக்கல்விமுறை போனற அவர்களுடைய வழக்கங்கள் தமிழர் அல்லது இந்தியர் பண்பாட்டை நினைவூட்டுகின்றன. கி.பி.1470 லிருந்து ஆண்ட நேசாஹுவால்பிள்ளை (Nezahualpilli; Pilli = குழந்தை) எனனும் மன்னன் தவறு செய்த தன் மூத்தமகனைக் கொன்று நீதியை நிலைநாட்டியதாகப் புகழப்படுபவன் ஆவான். தியோகல்லி (Teocralli) எனபவை மெக்சிகோ கோயில்களுக்குப பெயா. சிலநூறு ஆண்டுகளுக்கு தஙகள் நாட்டுககு வந்து நாகரிகம் கறறுததநத குவத்சால் கொதல் (quet zalcoatl) என்னும தெய்வீக மாந்தன் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் திருமப வருவான் என்ற நம்பிக்கை அம்மக்களுக்கு இருந்தது[6]. எனவே அக்காலகட்டததில் வந்த ஸ்பெயின் நாட்டவரை அவர்கள் மன முவந்து வரவேற்று கொள்ளிக்கட்டையால் தலையைச சொரிந்து கொண்ட நிலைக்கு ஆளாயினர் !

6. கி.பி. 1561இல் வெறும் 500 பேர்களுடன் சென்ற கார்டெஸ் என்னும் ஸ்பெயின் நாட்டவன் இரண்டரை கோடி மக்கள் வாழ்ந்துவந்த மெகசிகோ நாட்டை இரண்டே ஆண்டுகளுக்குள் கைப்பற்றிவிட்டான் கடைசி அஸ்தெக் அரசனான மாக்தெசிமா (Moctezuma)-வை வஞ்சகமாகச் சிறைபபிடிததுக் கொன்றுவிட்டான. வஞ்சகமும், துப்பாக்கிகள், குதிரைகள் ஆகியவை மட்டுமே இவ்வியத்தகு வெற்றிக்குக் காரணம் அல்ல அஸ்தெக் இனததவர் கொடூரத்தினால் பிற இனத்தவா வெறுப்படைந்திருந்தனர். கார்டெஸ் அவனை அறியாமலே பழைய உலகிலிருந்து கொணடு சென்றி ருந்த மாபெரும போர்க்கருவி அம்மை நோயேயாகும. அதுகாறும் அம்மை நோயை அறியாதிருந்த அமெரிக்கர்களை அது இலடசக்கணக்கில கொன்று ஒழித்தது. 1520-இல் இரண்டரை கோடி மக்களைக் கொண்டிருந்த மெக்சிகோ 1580க்குள் 19 இலட்சம் மக்கள் அளவுக்குக் குறைந்தது. எனவே ஸ்பெயின் நாட்டின் பிடிக்குள் மெக்சிகோ அடங்கியது வியபபன்று. (இபபொழுது மெக்சிகோ மக்கள் தொகை 9 கோடி)

---

6 "மாயா" மககளிடையேயும் இந்நம்பிககை இருந்தது. அவர்களிடைய இத் தெய்வீகமாந்தனுக்கு "குகுல் கான" (Kukulkan) எனபது பெயர். இவ்விரண்டு பெயர்களுக்குமே "பறக்கும் நாகம்" என்பது பொருள்

7. J.M. White : Cortes and the downfall of the Aztec empire ; Hamish Hamilton; London ; 1971; pp 352

W.H. Prescott : The conquest of Mexico ; 1843

பிரெஸ்காட எழுதிய இந்நூலும் "The conquest of Peru" என்னும் நூலும் உலகப் புகழ் பெற்றவை.

7. மெக்சிகோவுக்குத் தெற்கில் மத்திய அமெரிக்கப் பகுதியில் "மாயா" (Maya) நாகரிகம் கி.பி. 5–9 நூற்றாண்டுகளில் கோபன் (copan) பகுதியிலும்; பின்னர் கி.பி. 9–13 நூற்றாண்டுகளில் யுகாதன் (Yucatan) தீபகற்பத்தில் சீசென் ஈட்சா (Chichen Itza) பகுதியிலும் சிறந்து விளங்கியது. ஸ்பானியர் வருகைக்கு முன்னரே மாயா நாகரிகம் அழிவுற்றது. மாயா நாகரிகக் கோயில்கள் நிறைய உள்ளன. அவற்றின் கட்டட அமைப்பும், சிற்பவேலைகளும் தமிழ்நாட்டுக் கோயில்களை நினைவூட்டுவனவாக உள்ளன. மகரம் மற்றும் தாமரை உருவ அலங்காரங்களைக் காணலாம். வானியல் அறிவில் விற்பன்னர்களைக் கொண்டது மாயா நாகரிகம். ஓர் ஆண்டுக்கு 365.2420 நாட்கள் என்று அவர்கள் கணித்திருந்தனர். மாயாயுகம் கி.மு.3113இல் தொடங்கியது. இந்தியாவில் கலியுகம தொடங்கியது கி.மு. 3102 ஆகும். இவ்விரண்டு யுகங்களும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் தொடங்கியிருப்பது இந்தியர் தொடர்பு காரணமாக இருக்கலாம் என்பது சிலர் கருத்து. மாயா காலக்கணித வல்லுநர்கள் இற்றைக்கு 9 கோடி ஆண்டுகளுக்கு முன் உள்ள ஒரு நாளுக்கும், இனி 40 கோடி ஆண்டு கழித்து வர இருக்கும் ஒரு நாளுக்கும், நாள், தேதியைச் சரியாகக் கணக்கிட்டுக் கல்வெட்டுகளில் தெரிவித்துள்ளனர். உலகிலேயே "பூஜ்யம்"–மற்றும் "ஒன்று, பத்து, நூறு ——" என்னும் இடமதிப்பு எண்முறை ஆகியவை கண்டுபிடித்துப் பயன்படுத்தப்பட்டது, இந்தியர்களாலும் "மாயா" மக்களாலும்தான். எனினும் "தனிவளர்ச்சிக் கொள்கையினர்" ஆகிய பெரும்பாலான மேனாட்டறிஞர்கள் இவற்றை "மாயா" மக்கள் தாமாகவே கண்டுபிடித்து இருக்க வேண்டும் என்றே சாதிக்கின்றனர்.

8. தென் அமெரிக்காவில் பெரு நாட்டில் வழங்கிய நாகரிகங்கள் பல. கி.பி. 1200 முதல் இன்கா (Inca) என்ற இனத்தினர் இங்கு ஒரு பேரரசை நிறுவி நடத்தினர். அவ்வரசர் பரம்பரைக்கு "ஆயர் இங்கா" (Ayer Incas) என்று பெயர் அரசர்கள் ஞாயிற்றின் தோன்றல்களாகக் கருதி வழிபடப்பட்டனர். தலைப்பாகை அணிவர். அரசர்களும் பிரபுக்களும் காதில் பெரிய துளைபோட்டுக் குழைகளை அணிவர். பண்டைய எகிப்து நாட்டு தாலமி மன்னர்கள், ஹவாய்த்தீவு அரசர்கள் ஆகியவர்களைப்போல இன்கா அரசர்களும் உடன்பிறந்த தங்கையையே மனைவியாகக் கொள்வது மரபு. அமைச்சர்கள் பெயர் அமத்தர் (Amautas) என்பதாகும். பிரபுக்களுக்கு அபு அல்லது அபோ (apu/apo) என்று பெயர். பெரு நாடு நானிலம் என்னும் பொருளுடைய தகுவந்தின் சுயு (Tahuantin suyu) என்ற பெயரில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. பல்வேறு இனத்தினருக்கும் "ஐல்லு" (இல்?) Ayllu என்று பெயர்.

---

8. J Eric S. Thompson: The Rise and fall of Maya Civilisation: Victor Gollancz: London; 1956; pp 288

9. ஒலியிலும் கருததிலும் "ஐயர்" என்பதோடு "ஆயர்" ஒத்துள்ளதைக் காண்க. தமிழகத்தில் தொல்காப்பியர் காலந்தொட்டு மரியாதைக்குரியவர்களையும் அரசர்களையும் குறிக்கப் பயன்பட்ட "ஐயர்" என்ற சொல் பிராமணர் சாதிப் பெயரடைகளுள் ஒன்றாக ஆனது சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்துதான். (இப்பொழுதும் பழைய மரபுப்படி "ஐயர்" எனபது மரியாதைக்குரியவர் எசசாதியினராயினும் அவரைக் குறிக்க நாட்டுப்புற வழக்கில் பரவலாகப் பயன்படுத்தப்படுவது தெரிந்ததே)

9. பெருநாட்டு மொழியாகிய "கொஷுவா" (quechua) மொழியில் மந்திர, மார்க (சாலை), ஆசன, மாய, லய, பாதால, காஞ்சன, கோன், (சூரியன்) போன்ற தமிழ் மற்றும் இந்தியச் சொற்கள் பல வழங்கி வந்தன. கோயில்களில் தேவரடியார்களாகப் பெண்களை அர்ப்பணிக்கும் வழக்கம் பரவலாக இருந்தது. தலைநகரமான குஸ்கோ (Cuzco)வில் ஞாயிறு வழிபாட்டுக்கு அமைந்த பெரிய கோயிலில் 3000 பெண்கள் இருந்தனர். நரபலி வழக்கம் ஓரளவு உண்டு எனினும் மாயா, அஸ்தெக் தகியோரிடையே இருந்த அளவுக்கு அஞ்சததக்க அளவில் இல்லை. பெரு நாட்டு சாதாரணக் குடிமக்கள் அனைவருக்கும் அரசின் பொறுப்பில் வேலையும் உணவும்; நாடெங்கிலும பெருவழிகள்; செய்திகளை விரைவில் அனுப்ப வசதிகள்; ஆங்காங்கே உணவுப்பொருள் கிடங்குகள்; என்றவாறு இன்கா ஆட்சிமுறை ஏறத்தாழப் பொதுவுடைமை ஆட்சியைப் போலவே இருந்தது. ஆயினும் இன்கா மன்னர் மற்றும் பிரபுக்களுக்கு முழுமையான அடிமைகளைப போன்றே குடி மக்கள் நிலை இருந்தது. பெரு நாட்டின் போதாத காலம். இந்நாட்டிலும் இன்கா இன முன்னோன் ஆன "கோன்-டிகி" (Kon-Tiki); கோன் இறைய (Kon Iraya) அல்லது "வீர கோசா" (vira Coch) என்னும் தெய்வீக மாந்தன் 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீண்டும் வருவான் என்ற நம்பிக்கை இருந்து வந்தது! ஸ்பெயின் நாட்டில் பன்றி மேய்த்து வந்தவனான பாதகன் பிசாரோ (Pizaro) என்பவன் 1533 ஆம் ஆண்டு வடக்கிலிருந்து பெரு நாட்டிற்குள் 177 பேருடன் புகுந்தபொழுது அவன்" வீரகோசா" எனக் கருதப்பட்டு, வந்தாரை வரவேற்று வாழவைக்கும் பாங்கில் அன்புடன் வரவேற்கப்பட்டு அப்போதைய இன்கா மன்னன் அதாகல்பன் (Atahualpa) இடம் அழைத்துச் செல்லப்பட்டான்.

10. வஞ்சகன் பிசாரோ தந்திரமாக அதாகல்பனைச் சிறைப்பிடித்தான். அரசனே தெய்வமாகக் கொண்ட நாடு ஆகலின் பெருநாடே செயல் இழந்தது. அரசனை விடுவிக்க வேண்டுமானால் 17'X20' அளவுள்ள அறை நிறைய ஆள் உயரத்துக்குத் தங்கத்தால் ஆகிய பொருள்களைப் பிணயமாக நிரப்ப வேண்டுமென்றான். அவ்வாறே நிரப்பினர், பெருநாட்டு மக்கள். அவ்வளவு தங்கத்தையும் கைப்பற்றி ஸ்பெயின் நாட்டுக்குக் கப்பல் ஏற்றி அனுபபிவிட்டுப் பின்னர் பிசாரோ அதாகல்பனைக் கழுத்தில் கிட்டிபோட்டு நெறித்துக் கொன்றான். அதாகல்பனின் மனைவிமார் (உடன்கட்டை ஏறுவது போல) தற்கொலை செய்து கொண்டனர். நூற்றுக்கணக்கான வீரர்களும் உடன் தற்கொலை செய்து கொண்டனர்[10] (அதாகல்பனின் தந்தை ஹுவானகாபக் (Huyana Capac) என்பவன் அவனை விட அனுபவம் மிக்கவன். எனினும் 1527 இல் சுமார் 50வயது அளவிலேயே அவன் (ஸ்பெயின் நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குப் புதிதாக வந்திருந்த) பெரியம்மை, நோயால் அகாலமாக இறந்திருக்காவிட்டால் பிசாரோ அவ்வளவு எளிதில் அப் பேரரசைக் கைப்பற்றியிருக்க இயலுமா என்பது ஐயத்திற்குரியதே)".[11]

11. புறநானூறு 66 இல் வெண்ணிக்குயத்தியார் கரிகாலனை,

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"

---

10. பாண்டிய மன்னர்கள் இறந்தால் அவர்களுடன் சாகச் துணுரை கொண்டு இருந்த வீரர்களைப் பற்றி மார்கோபோலோ கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கூறியுள்ளார்.

11. W.H. Prescott : The Conquest of Peru; 1847; E.Hyans and G.Orldish; The Last of the Incas Longmans; London: 1963; pp 268; John Hemming: The Conquest of the Incas; Macmillan; 1970 pp 641

என்று அழைப்பதிலிருந்து பருவக்காற்றைப் பயன்படுத்தி ஆழ் கடல் நடுவே கலம் செலுத்த அவன் முன்னோர் காலத்திலேயே தமிழர் வல்லவராயிருந்ததை அறிகிறோம். மதுரைக் காஞ்சி 75–88 வரிகளில் நிலந்தரு திருவிற்பாண்டியன் சாலியூர் ஆகிய ஜாவா தீவை வென்றமை,

"தென்கடல் குண்டு அகழி,

சீர் சான்ற உயர் நெல்லின்

ஊர் கொண்ட உயர் கொற்றவ!"

என்ற அடிகளில் குறிக்கப்படுவதைக் காணலாம். மிகப் பிற் காலத்தில் கூட கி. பி. 15ஆம் நூற்றாண்டில் தமிழ் மாலுமியான முகைய்யதின் வக்குசு நியூசிலாந்து வரை சென்றுள்ளான். அவன் கப்பல் மணி "முகைய்யதீன் வக்குசு உடைய மணி" என்னும் தொடர் பொறித்து வெண்கலத்தால் ஆனது இன்றும் நியூசிலாந்து தலைநகரமான வெலிங்டன் நகர அருங்காட்சியகத்தில் உள்ளது.[12] பசிபிக் பெருபங்கடலில் உள்ள பாலினேசிய தீவுகள் பலவற்றிலும் தமிழ்மொழி, பண்பாடு இவற்றோடு இயைபுடையன. இவற்றையெல்லாம் கருதும் பொழுது பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து கடல் வழி அமெரிக்கா சென்றவர்கள் மூலமாக மேலே விவரித்த தமிழ் மொழி, பண்பாட்டுக் கூறுகள் கொலம்பசுக்கு முந்திய அமெரிக்க நகரங்களில் புகுந்திருக்கலாம் என்ற கருத்து விந்தையானதல்ல. எனினும் பன்னாட்டறிஞர்களும் ஒப்ப வேண்டுமாயின் இது குறித்து மேலும் மிக விரிவான ஆய்வுகள் தேவை.

**12. சென்னை தலைமை மருத்துவமனையில் கதிரியக்க மருத்துவம் மற்றும் புற்றுநோய்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் ஜி. சீனிவாசன் அவர்கள் சில ஆண்டுகளாக நகுவாதில், மயா, கொஷுவா மொழிகளில் உள்ள சொற்களில் தமிழ்மொழிச் சொற்களோடு ஒப்புமையுள்ள சொற்களைக் குறித்து ஆய்வு செய்தார். இது குறித்து 9–10–86 அன்று** சென்னைப் பல்கலைக்கழகத்தில் "தொல் பண்பாடுகளின் ஆய்வகம்" (Institute of Traditional Culture) ஆதரவில் அருமையான ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தினார். இதுவரை அத்தகைய 500 சொற்களை அவர் அடையாளம் கண்டுள்ளார். அவற்றுள் சில வருமாறு:–

| | | |
|---|---|---|
| apu/apo | = **(அப்பா)** | தலைவன் |
| Huari | = | வாரி (சுவர்) |
| Cuzco | = | கிழக்கில் உள்ள நகர் ("கிழக்கு"—லிருந்து) |
| Pulque | = | மது (புளிச்ச > புழுக்கு என்பதிலிருந்து) |
| runtu | = | (உருண்டை)முட்டை |
| Cenote | = | சந்ததி |

12. அம்மணியின படத்தை "Tamil University News Bulletin" 16–7–83 இதழில் காண்க.

| | | |
|---|---|---|
| Siyano | = | சிறியவன் (றகரம் கெட்டது) |
| Kocha | = | கொச்ச (பையன்) |
| Zak | = | நாக்கு |

அமெரிக்க இடப்பெயர்களில் 50%தமிழ்ச்செற்கள் போல் உள்ளதாகவும் அவர் கண்டறிந்துள்ளார்.

பெருநாட்டின் தென்பகுதியில் உள்ள முக்கிய நகரமான தியாகுவனகா (Tiahuananaca) என்னும் நகரின் பழைய பெயர் "தெப்பிக்கலா" (Taypicala) என்பதாகும். அதன் பொருள் "மையக்கல்" என்பதாகும்.( பிற எடுத்துக்காட்டுகள் : மதுரா, ஊர், கதிர்மணி, கூட்ட, மச்சுப்பிச்சு, யுகமணி, காஞ்சி, தமலைக்கன், மடவெரி செல்வ போன்றவை.

# வடமொழிச் சொற்கள் சிலவும், அவற்றிற்கான தமிழ் மூலங்களும்

முனைவர் கு. இராசேந்திரன்,
தமிழ் விரிவுரையாளர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
சென்னை.

இந்தியாவின் தென்கோடியில், தமிழ்நாட்டில் வாழும் 6 கோடி மக்களுக்கும், தமிழ்நாட்டிற்குச் சிலகல் தொலைவு இடைவெளி தாண்டியுள்ள தமிழீழப் பகுதியில் வாழும் 30 இலக்கம் மக்களுக்கும், இன்னும் உலகின் பல்வேறு நாடுகளில் வேலை நிமித்தமாய்ச் சென்று பறந்து வாழும் 2 கோடி மக்களுக்கும் தாய்மொழியாக விளங்கிவரும் மொழி, தமிழ் மொழியாகும். இம்மொழி, உலகின் மிகப் பழைய மொழிகளான கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம் ஆகியன போன்ற தொன்மையுடையது என்பது, அறிஞர் பலர் கருத்து. இந்தியாவில் வழங்கும் மொழிகள் பலவுள்ளும். தமிழும் சமஸ்கிருதமுமே பழைமையான அடிப்படை மொழிகள் என்பதும், அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்தாக உள்ளது. தமிழும் சமஸ்கிருதமும் சமத்தகுதியுடையன என்றும், சமஸ்கிருதத்திற்குத் தமிழ் கடன்பட்டுள்ளது என்றும், தமிழ் சமஸ்கிருதத்திற்குக் கடன்படவில்லை என்றும், சமஸ்கிருதமே தமிழுக்குக் கடன்பட்டுள்ளது என்றும் பல்வேறு கருத்துகள், அறிஞர்கள் நிலையில் உள்ளன. மொழிஞாயிறு பாவாணர் அவர்கள், தமிழ் பற்றியும், சமஸ்கிருதம் பற்றியும், திராவிட மொழிகளோடு தமிழுக்குள்ள உறவு பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடும் பொழுது, தமிழே, திராவிடத் தாயும், சமஸ்கிருதத்திற்கு மூலமும், உலக முதல் மொழியுமாகும் என்று வரையறுத்துரைத்தார். மொழிஞாயிற்றின் இக்கூற்றே, இன்று, பெரிதும் வலுப்பெற்று வருகின்றது.

வடமொழி எனப்படும் சமஸ்கிருதத்தில், நூற்றிற்கு 60 விழுக்காட்டுச் சொற்கள் முழுத்தமிழ்ச் சொற்கள் என்றும், 20 விழுக்காட்டுச் சொற்கள் வட திராவிடமாகிய பாலி–பிராகிருதத்தின் சொற்கள் என்றும், 10 விழுக்காட்டுச் சொற்கள் வேதமொழிச் சொற்கள் என்றும், 10 விழுக்காட்டுச் சொற்கள் இடுகுறிச் சொற்கள் என்றும் பாவாணர், தம் ஆய்வின் வழி அலசிக் காட்டியுள்ளார்.

அளவில் சிறியதான இக் குறுங்கட்டுரை, வடமொழியில் வழங்கப்படும் கன்யா (Kanya), கந்தம் (Gandha), கணம் (Gahana), காலா (Kala) ஆகிய நான்கு சொற்களும் தூய தனித்தமிழ்ச் சொற்களின் திரிபே என்பதை விளக்கவுள்ளது.

**கன்னி :**

பூப்புற்ற பருவமடைந்த பெண், 'கன்னி' எனப்படுவாள். இதே பொருளில், வடமொழியில் வழங்கும் இச்சொல், இருக்கு வேதத்திலும் வழங்கப்படுவதாக, மானியர் வில்லியம்சு அகராதி (Monier William's Sanskrit Dictionary) வழி (ப.201) அறிகிறோம். 'கன்யா' என்ற வடிவில் மட்டும்மல்லாமல், இருக்கு வேதத்தில் கனா (Kana) என்னும் பிறிதொரு வடிவிலும் 'கன்னி' என்னும் சொல் அதே பொருளில் வழங்கி வருவதாக, அதே மானியர் வில்லியம்சு (ப.201) வழி அறிகிறோம்.

'கல்' என்னும் வேரே, கன்னி என்னும் தமிழ்ச் சொல்லுக்கும், கன்யா, கனா என்னும் வடமொழிச் சொற்களுக்கும் மூலமாகும். 'கல்' என்னும் மூலத்திற்குக் கருமை, நெருக்கம் என்பது அடிப்படைப் பொருள். 'கல்' என்னும் சொல் மலையைக் குறிக்கும் வழக்கு மிகப் பழைமையானது. மலை கருமை நிறமுடைய காரணத்தாலேயே, அவ்வாறு அழைக்கப்பட்டது.

"கல்மிசை அருவி " (நற். 151,4 ; புறம். 150,16)

"கல்யாறு" (மலைபடு. 324)

"கல்சுனை" (நற். .34,1)

எனப் பல சான்றுகள், 'கல்' என்பதற்கு மலைப் பொருள் தருவனவாகும். மலை கருநிறத்தது என்பதனை,

"சேயோன் மேய மைவரை உலகமும்"

என்னும் தொல்காப்பியத் தொடராலும்,

"மாசறக் கழீஇய யானை போலப்

பெரும்பெயல் உழந்த இரும்பிணத் துறுகல்" (குறுந்.)

"எருமை யன்ன கருங்கல்" (புறம் 4.1)

என்னும் சங்கத் தொடர்களாலும் அறியலாம்.

'கல்' என்னும் இக் கருமைச் சொல்லிலிருந்தே, கல் + கு – கங்கு = கருந்தினை; கல் + கு = கங்கு— கங்குல் = இரவு என்பனவான கருமைப் பொருட் சொற்கள் தோன்றின.

கருமை, இருள் ஆகிய இவற்றோடு, கூட்டம், நெருக்கம் என்னும் கருத்துகள் உறவுடையன ; ஒன்றுள் ஒன்றாய்ப் பிணைப்புடையன. அவ்வகையிலேயே, 'கல்' (நெருக்கம்) என்னும் நெருக்கப் பொருள் மூலம்,

எனவும், கல்–கன்–கன்னு; கல்–கன்–கனல்; கல்–கன்–கன்னி எனவும் சொற்கள் வழங்குகின்றன. ஒரு பொருள் ஒரு பொருளோடு மிக நெருக்கமாக ஒன்றுதல் என்னும் அடிப்படையில், வெப்பக் கருத்துப் பிறக்கின்றது. 'அல்' என இரவைக் குறித்த சொல், நெருக்கக் கருத்திற்கும் உரியதாக மாறி அல் = அன் = அனல் எனவும், அல் = அன் = அனல் = அழல் எனவும் பிறப்பதை, இங்கு ஒப்பு நோக்கி உணரலாம். இவ்வடிப்படையில், 'கன்னி' என்பது வெப்பக் கருத்தின் அடிப்படையில், சமைந்தவள், பூப்பெய்தியவள் என்பது பொருளாகிப் பிறந்ததாகும். இக்கன்னி என்பதே, 'கன்யா' என வடமொழியில் திரிகிறது. 'கனா' (Kana) என்னும் பிறிதொரு வடசொல்லும், கல் – கன் – கனா எனக் 'கல்' மூலத்தில் பிறந்ததேயாகும். வடமொழியில், இவற்றிற்குப் பொருத்தமான மூலம் (origin) காட்டப்படவில்லை.

### கந்தம் :

மானியர் வில்லியம்சு அகராதியில் (ப. 220) வடசொல்லாகக் காட்டப்படும் 'கந்தம்' என்னும் சொல்லுக்கு, 'மணம்' என்பதே பொருளாகும். தமிழிலும், இப்பொருளிலேயே, இச்சொல் ஆளப்படுகிறது. 'Gandha' என்னும் இச் சொல்லுக்குப் பொருத்தமான வேர் (Root) தேடிய மானியர் வில்லியம்சு (Monier Willams), 'gandh' என்பது மூலமாகச் சொல்லப்படுகின்றது என்று சுட்டிவிட்டு, அதற்குப் பொருகளாக, to injure, to hurt, to kill, to move, to go, to ask or to beg (ப. 280) என்பனவற்றைத் தந்துள்ளார்.

'கந்தம்' என்ற சொல் குறிக்கும் பொருளைக் குறிக்கும் வேறு சொற்களாகத் தமிழில், மணம், நாற்றம், விரை, கலவை என்பனவற்றைச் சுட்டலாம். 'மணத்தல்' எனின், 'கலத்தல்' என்பது பொருள். 'நாற்றம்' என்பதற்குப் 'பரவுதல்' (நாறுதல்–பரத்தல்) என்பது பொருள். 'விரை' என்பதற்கு, 'விரவுதல்' (கலத்தல்) என்பது பொருள். 'கலவை' என்பதற்குக் 'கலப்பது' என்பது பொருள். மணம், நாற்றம், விரை, கலவை ஆகிய நான்கு சொற்களுக்கும் உள்ள பொருள் ஒன்றே. அஃதாவது, மூலப்பொருள் பரவுதல், ஒன்றுதல், நெருங்குதல், கலத்தல் என்பனவே. இந்நாற்சொற்பொருளையே, 'கல்' என்னும் நெருக்கப் பொருள் மூலம், கல் + து – கந்து – கந்தம் என இச்சொல் தந்து உணர்த்துகின்றது.

'கந்தம்' என்பதை வடசொல்லாகக் காட்டும் சமஸ்கிருத அகராதி, அதற்குரிய மூலமாக (Origin)க் காட்டும் 'gandh' என்பதற்குரிய பொருள்களை விளக்குவதை ஒப்புநோக்கி, அதன் பொருத்தமின்மையை அறியலாம்.

### கணம் :

தமிழ், வடமொழி இரண்டிலும் 'கூட்டம்' என்னும் பொருள் தரும் கணம்' என்னும் சொல்லை, மானியர் வில்லியம்சு, (ப.287) வடசொல் எனச் சுட்டியுள்ளார். ஆயின், இவ்வடமொழிக் 'கணம்' தமிழில் வழங்கும் 'கணம்'

என்பதின் வேறன்று. 'கணம்', என்னும் சொல்லுக்குக் 'கள்' என்பது வேர் (Root).

கருமைக் கருத்தும் கூட்டக் கருத்தும் ஒன்று என்றதன் அடிப்படையில், வயல்வெளிக் களம், போர்க்களம், ஆடுகளம் எனப்பெறும் 'களம்' யாவும், அவற்றின் கூடற்பொருளுரிமைவழிப் பிறந்தன எனலாம். இவ்வாறாகக் கூடற் பொருள் உடைய 'கள்' என்னும் மூலமே, கள்–கண்–கணா–கணம் எனக் கண முகில், புலிக்கணம் என்பனவாகத் தமிழ்ச் சொல் தருவதாயிற்று. இத்தமிழின் கூட்டமாய கணம் என்பதோடு, கணியன், கணக்கு, கணக்காயன் முதலான சொற்கள் சேர்ந்து இணைந்தவையாகும். வடமொழிக் 'கணம்', தமிழின் கணமன்றி வேறன்று.

## காலா (Kala) :

கருமை எனப் பொருள்படும் 'காளம்' என்னும் செந்தமிழ்ச் சொல்லே, 'காலா' என வடமொழியில் வழங்குகிறது. தமிழின் 'ளகரம்' வடமொழியில் இல்லை. ஆதலால், தமிழ் 'ளகரம்' யாவும், வடமொழியில், 'லகரம்' எனவே ஒலிக்கப்படும். களங்கம் 'கலங்கா' எனவும், காளி 'காலீ' எனவும் வடமொழியில், இவ்வடிப்படையிலேயே புழங்குகின்றன.

'கல்' என்னும் கருமைக் கருத்துவேர், 'கள்' எனத் திரிவதை, முன்பே கண்டோம். இக் 'கள்' என்னும் கருமையே, களா, கள்ளம், களவு, களி, கண், கண்ணன் என்னும் சொற்களுக்கெல்லாம் மூலமாகும். பொழுது–போழ்து –போழ்தம் எனவும், நெய்–நேய்–நேயம் எனவும், தொள்–தொடு–தோடு–தோண்டு எனவும், குறில்நெடில் மாற்ற நெறி முறைக்கேற்பக், 'கள்' என்னும் கருமை குறித்த சொல், 'காள்' என நெடில் பெற்று, வேறு வடிவெய்துகின்றது. இக் 'காள்' என்னும் வடிவிலிருந்தே, காளை, காளம், காளமேகம், காளி, காளான், காள்–காழ்–காழ்ப்பு எனப் பல சொற்கள் விரிகின்றன. கருமை என்னும் பொருளுடைய தமிழ்க் 'காளம்' என்பதே, 'காலா' எனச் சமஸ்கிருதத்தில் திறந்தது.

'காளம்' என்னும் இத்தமிழ்ச் சொல், வடமொழியில் 'காலா' எனத் திரிந்து பரவியதற்குமேல், இன்று, ஆங்கிலவழிச் செலவு மேற்கொண்டு, உலகப் பெருஞ்சொல்லாக உலாவருவதையும் சுருங்கச் சுட்டி, இக்கட்டுரையை முடிக்கின்றேன். Coco-Cola என்னும் அமெரிக்கக் கம்பனி (American Company) அளிக்கும் குடிப்பில் (drink), 'cola' என்பது, 'காளம்' என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும்.

Kola Nut - A brownish seed, about the size of a chestnut, produced by a tropical tree belonging to the genus cola, containing both coffeine and the obromine; its extract is used in soft

drinks (1865-70) என்னும் The Random House Dictionary அகராதி தரும் விளக்கப்படியும்,

Coca-Cola - The first half of this tasty American beverage comes from the Coca (Erythrolon coca)plant whose leaves are used to import flavour to the drinks. Cola is from the Kola (Cola acuminata) nut, grown in Africa whose flavour is also used in making the drink என்னும் Wordwise (The Orgin of Words) (P.75). புத்தகம் தரும் விளக்கப்படியும், கருமை நிறக் கொட்டையிலிருந்து வடித்தெடுக்கப்படும் சாறு சேர்ந்ததாலேயே, 'Cola' எனப் பெயர்வந்ததாய் அறிகிறோம். தமிழின் 'காளம்', வடமொழியில் 'காலா' என்றாகி, அதுவே, மேலை – ஆரிய மொழியில், 'கோலா' எனத் திரிகின்றது. இக் கருத்தினை, நிலக்கரியைக் குறிக்கும் 'Coal' என்னும் ஆங்கிலச் சொல் எவ்வாறு வந்தது என்பதை முன்சுட்டிய 'Wordwise' என்னும் புத்தகம், பின் வருமாறு கூறும்வழி, மேலும் உறுதியுறுவதை உணரலாம்.

Coal - Coal goes back to the Hindi 'Koela' (Sans.Kaalaa, black) which comes from the Indo-European stem 'geulo' என்பதே அது. நாமும், தமிழில், 'கல்' என்னும் கருமை மூலத்திருந்தே கல்–கற்–கர்–கரி என நிலக்கரியை (Coal)க் குறிக் கிறோம். இதன்வழி, Cola என்னும் குடிப்பில் (பானத்தில்) வரும் சொல்லும், Coal என்னும் நிலக்கரியில் வரும் சொல்லும் காள்–காளம் என்னும் தமிழ்க் கருமை மூலச்சொல்லே (Root-word) எனத் தெளியலாம்.

A SUMMARY OF THE PRINCIPLES OF TAMIL ETYMOLOGY AND LANGUAGE UNIVERSALS.

(Dr. R, MADHIVANAN)

A dictionary in any spoken language brings people closer to the perfect language, But, an Etymological Dictionary brings the perfect language closer to the parent language enabling the linguists to frame principles of Etymology.

Tamil is one of the oldest living languages of the world. It is the principle language of the over 30 known Dravidian languages. A comprehensive Etymological Dictionary of the Tamil language is being compiled in multi-volumes by the Directorate of Tamil Etymological Dictionary project, sponsored by the Government of Tamil Nadu. First part of the first volume has been published during 1985. The successive volumes are in progress.

**Principles of Tamil Etymology:**

Far beyond all written records in a languages, the language itself stretches back and offers itself for investigation. R.C. Trench in his elegant lectures on study of words observed, 'Language is fossil poetry and fossil history as well.

We were lucky to have as our guide late Prof. G.Devaneya Pavanar, an erudite Tamil Scholar and etymologist of great repute and he was an unflappable discoverer of roots of words. He has done a signal service to all the philologists and especially to etymologists of the world. His monumental work has proved to the world that Tamil has an antiquity lost in the pre-historic past and is of a purity and constancy that makes it understood by the laity, as easily now as it was two thousand years ago.

According to the findings of Pavanar, we are not satisfied with the earliest recorded word as an accepted etymology, but apply his two methods, to split the word to

find the primary root if it is a single word, or reconstruct, if it is a compound word.

The two basic methods for finding etymology are

1. Root tracing etymology

2. Reconstructed etymology on semantic basis.

Principles of root- tracing etymology is supported by deictic theory of Tamil origin, a newly advanced theory of Pavanar. Principles of reconstructed etymology are described in the form of

phonological rules

morphological rules

syntactic rules

semantic rules and

global rules wherever necessary.

**Thought transfer technique:**

Since meaning (thought) and word are inseparable we call language a thought transfer technique. Thought transfer methodologies or techniques are arranged in the form of etymological principles.

Apparently, eventhough phonological and morphological studies seem to have no connection with the semantic content in them, the semantic connections are vivid when they occur in syntactial structures. Therefore phonological and morphological rules are framed on semantic basis mainly concentrating on the minute differences of the meaning conveyed in syntactic patterns.

**The role of semantics:**

The principles of Tamil etymology attach much importance to the semantic part of the world, because man thinks logically. Language is reflection of thought. Thoughts

are semantically linked when they take the alternative expression of sound (instead of dumb signs) being ordered in syntactical order when a thing is looked in a different angle, different thoughts flash in mind. Man chooses the required sound variant and coins a new word or phrase with the help of the verbal root or noun base already in use in a related meaning.

Therefore meaning or thought is the key for the birth and growth of language. Etymologists will never go wrong if they trace the proto-form of the word in the light of basic primary meaning and semantic expansion theories.

The primary thought hidden in the word must be taken as the root meaning and origin of word.

The origin of Tamil primary roots are described in the deictic theory of Tamil origin.

**Deictic theory of Tamil origin:**

Professor Pavanar advanced an hypothesis known as deictic theory of the Tamil language.

The deictic sounds are three primary vowels in Tamil viz., a,i,u. The semantic content of the vowels are as follows.

i) The remote demonstrative - ā or a

ii) The proximate demonstrative - ī or i

iii) The frontal demonstrative -ū or u

The mouth actually points, by its wide opening when producing the sound a, to a remote place or object in the opposite direction; by the drawing back of the lips in the lateral proximity; and by the protruding of the lips when producing the sound u, to a place or object in the immediate front of the speaker.

Thus, all the three demonstrative sounds have originated in Tamil, only as oral pointers, and with the exception of the frontal demonstrative which has become

obsolete, are unfailingly performing their functions even to this day.

**The root idea of frontness and its semantic development:**

Ideas beget ideas on the basis of association, comparison, causation or succession. While some have only a limited capacity, some others are very prolific in this direction. Of all notions conceived by Man, that of frontness expressed by the deictic sound u, has been the most prolific, and accounts for about 75 percent of the vocabulary not only in Tamil but also in the Dravidian languages, and for a less extent of varying degrees in other languages.

Verbal roots take their form only from the notion of frontness. This is named as nonary semantic cycle which is the continuation and culmination of the notion of frontness.

The ideas and associated ideas comprised in the nonary semantic cycle are following.

**Frontness**

1) Origination or appearance

2) forward motion

3) Nearness

4) Meeting

5) Contact

6) Deviation

7) Boring

8) Penetration

9) Appearance (again)

Ideas branch and sub-branch into several or many species or varieties, a number of times in succession. Each of the nine major ideas contributing the nonary semantic cycle is

capable of generating a host of ideas in this manner, paving way for many many derivations from a single root.

**Verbal illustration of the Nonary Semantic cycle:**

**(1) Frontness:**

u - udo (int.) lo! infront of me

**(2) Origination or generation:**

u - ul - ullari (n.) shoot, bud.

ulavai (n.) green twig with leaves upon it

**(3) Forward motion**

u - ul - undu - to push forward, to thrust forward.

ukai - to go, to walk, to move.

udai - to kick

**(4) Nearness:**

u - uru - to or come near.

ul - al- andu - to approach,

andai - nearness

**(5) Meeting:**

u - uṟu (v.i.) - to meet, gather

udangu (adv.) - to gather,

**(6) Contact:**

u - uṟu - (vi) + (v.t) to touch

uṟavu - (n.) contact, relationship

unnu - (v.i.) join the lips to eat.

**(7) deviation:**

ulavu (v.i.) to move above, to go round.

urul (v.i.) to roll

urulai (n.) roller

**(8) Boring:**

u - ul (n.) inside, (part.) in

uli (i.) chisel

uḻu (v.t.) to plough.

**(9) Penetration:**

u - uḻu (v.k.) to be bored through by wood - worm, as rotten wood.

uruvu (v.t.) to penetrate, pass through

The frontal demonstrative ū, which generally assumes the form uḻ as a root, combines with all the six initial consonants, and produces six secondary roots viz., kuḻ, suḻ, tuḻ, nuḻ, puḻ and muḻ, each of which inherits from its parent the quality of expressing all the ideas covered by the nonary semantic cycle.

Illustrations and rules of morphological and semantic changes will briefly be explained in the thesis.

**Language universals:**

Attempt is made to build classification of language universals on purely conceptual semantic basis combining typological, comparative and historical methods. Typological method is applied to verify comparative and historical data.

Soviet linguists have advanced new theories regarding language universals viz.

(1) theory of remote genetic affinity of several language families.

(2) the Nostratic hypothesis aims to prove kinship of six large families of world, which constitutes the Nostratic macro - family of world languages.

Prof. Pavanar traced back the origin of the first human speech to deictic theory which purely related the demonstrative to logical thinking and semantic expansion. He interpreted the methods in which the demonstratives formed base for the evolution of verbal roots and then to words of different types. This formed the core of the first language of the earth.

Typological study shows that geographical distributions of the same basic roots, pronouns, humanbody parts, kinship terms, names of flora and fauna and certain grammatical features in many language families are genetically related. For example the synonyms for cow in Tamil happen to be geographically distributed in all the major language families. These similarities are taken as language universals.

All the individual basic words are classified into four groups as follows for the requirement of semantic based typological study and geographical distribution.

The basic vocabulary:

1. Carried vocabulary - classified according to the typological study. (It means the vocabulary carried from the parent language of the world).

2. Borrowed vocabulary - classified according to to comparative study.

3. Corrupted vocabulary - classified according the linguistic study.

4. Coined vocabulary - classified according to historical study.

The proto - forms of each category may be determined with the help of chronological fixation of words.

# பசிபிக் தீவுகளின் நாகரிகங்களில் தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் கூறுகள்.

பி. இராமநாதன், எம்.ஏ., பி.எல்.

1. பசிபிக் பெருங்கடலில் உள்ள எண்ணிறந்த தீவுகளைப் பின்வருமாறு மூன்று பிரிவுகளில் அடக்குவர்கச்

| பிரிவு | தீவுகளின் எண்ணிக்கை | நிலப்பரப்பளவு (சதுரமைலில்) | இன்றைய மக்கள் தொகை (லட்சத்தில்) | அவர்களுள் பழங்குடியினர் (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. பல தீவுக் கூட்டம் (பாலினீஷியா) | நியூசிலாந்து ஹவாய் சமோவா, வேறு பல தீவுகள் | 1,13,500 | 40.00 (நியூசிலாந்து 3ட.00 ஹவாய் 8.00 உட்பட) | 6.00 |
| 2. சிறு தீவுக் கூட்டம் (மைக் ரோனீசியா) | 2250 (மக்கள் உள்ளவை = நூற்று பத்து) | 1,110 | 2.60 | 1.00 |
| 3. கறுப்பர் தீவுக் கூட்டம் (மெலானீசியா) | நியூகினி, பிஜி பிற தீவுகள் | 4,00,000 (85% நியூகினி) | 5,000 | 37.00 (ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளை ஒத்த மொழி பேசுவோர்) 3.00 (மெலானீசிய மொழி பேசுவோர்) |

2. குரங்கினத்திலிருந்து கிளைத்ததுவும் மாந்தரை ஒத்ததுவும் ஆன இனம் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றினது என்றாலும் தற்கால மாந்தனை ஒத்தவர்கள் இற்றைக்கு ஒரு லட்சம் ஆண்டுகட்கு முன் தோன்றி இருத்தல் வேண்டும். தற்கால மாந்தனை ஒத்த மாந்தன் ஒருவனுடைய எலும்பின் கல்வடிவம் (fossil) அண்மையில் இலங்கையில் கொழும்புக்கு 60மைல் கிழக்கே படதொம்ப லெனா (Batadomba lena) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[1] அது தொல் தமிழன் (தொல் திராவிடன்) எச்சம் என்பதில் ஐயமில்லை. இது ரேடியோ கார்பன் முறைப்படி இன்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முந்தியது என நிறுவப்பட்டுள்ளது. இற்றைக்கு 1,00,000 ஆண்டுகளுக்கு முன் மொழி தோன்றியிருக்க வேண்டும். இது நிகழ்ந்த இடம் ஆப்பிரிக்கா அல்லது அக்காலக்கட்டத்தில் தமிழ்நாட்டை ஒட்டித் தென்பால் இருந்த கடல்கொண்ட தென்னாடு ஆக இருத்தல் வேண்டும். மொழி தோன்றிய பின்னர் சிலகாலம் கழித்து கி.மு. 40,000 –30,000 காலக்கட்டத்தில் மாந்தர் வட ஆசிய, ஐரோப்பியப் பகுதிகளுக்கும், அமெரிக்கா, ஆஸ்திரேலியாவிற்கும் சென்று இருக்கவேண்டும். எனவே மாந்தர் இனத்தின் முதல் தாய்மொழியாகிய தமிழுக்கும் பண்டை அமெரிக்கர் மொழிகள் ஆகியவற்றுக்கும் இடையே, 30,000 ஆண்டு கழிந்த பின்னரும் இன்றும் ஒப்புமைகள் காணப்படுகின்றன. உறவுமுறைகளிலும் அவர்களிடையே ஒப்புமைகள் காணப்படுகின்றன.[2]

3. மேற்சொன்ன பசிபிக் தீவுக் கூட்டங்களின் மொழிகள் கீழை ஆஸ்ட்ரோனீஷிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன. (மேலை ஆஸ்ட்ரோனீஷிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை – மலாய்; ஜாவா, தகலாக் (பிலிப்பைனஸ்) ; மலகாசி (மடகாஸ்கர்) ; போன்றவை. அவற்றைப் பேசுவோர் மொத்தம் 15 கோடி.) கீழை ஆஸ்ட்ரோனீஷிய மொழிகளைப் பேசுவோர் மொத்த எண்ணிக்கை 10 லட்சம்தான். அம் மொழிகள் எண்ணிக்கை சுமார் 300. பிஜி மற்றும் மெலானீஷிய தீவுகளுக்கு மனிதர்கள் கி.மு. 1000க்கு முன்னரே குடியேறிவிட்டனர். அதற்குப் பின்னரே பாலினீஷியத தீவுகளில் மக்கள் குடிஏறத் துவங்கினர். கடைசியாகக் குடி யேறிய தீவு நியூசிலாந்து (சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே அங்கு மயோரி பழங்குடிமக்கள் ஹவாய்த் தீவுகளிலிருந்து குடியேறினர்.)

4. 'நக்க சாரணர் நாகர் வாழ்மலைப் பக்கம் சார்ந்து அவர் பான்மையன்" ஆன சாதுவான் சென்ற தீவு இந்தோனேசியத் தீவுகளில் ஒன்றாகவும் இருக்கலாம். பசிபிக் தீவுகளில் ஒன்றாகவும் இருக்காலம். ஏனெனில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்வரை பிஜி போன்ற பசிபிக் தீவுகளில் மனிதர்களை உண்ணும் வழக்கம் உண்டு. விருந்தினர்க்கு மகளிரைத் தந்து உபசரிக்கும் பழக்கமும பசிபிக் தீவுகளில் பரவலாக இருந்தது. "நம்பிக்கு இளையள் ஓர் நங்கையைத் தந்து" சாதுவனை உபசரிக்க முற்பட்டதை மணிமேகலை கூறுகிறது. கடந்த நூற்றாண்டில் ஐரோப்பியப் பாதிரியார் ஒருவருக்கும் ஒரு நங்கையைத் தர ஆணையிட்டான் பசிபிக் தீவு ஒன்றின் தலைவன்! பாதிரியாருக்கு வந்தது சினம். தலைவனோ ஒரு நங்கை போதாது என்று பாதிரியார் சினப்படுவதாக எண்ணி[3] "ஐயாவுக்கு இரண்டு பெண்களைக் கொடுங்கள்" என்றான். பசிபிக் கடல் தீவுகளோடு தமிழர்கள் தொடர்பு சாதுவன் காலத்தோடு முடியவில்லை.

---

1. Kenneth A.R. Kennedy and Siran U. Denraniyagala:- "Possible remains of 28000 years old Hominids from Sri Lanka - pp. 394-398 of CURRENT ANTHROPOLOGY Volume 30; No3; June 1989.

2. செந்தமிழ்ச் செல்வி. (ஆகஸ்டு செப்செம்பா 1991)- "திராவிடார் உறவுமுறை"

3. Bengt Danielsson:- Love in the South Seas; Alen and Unwin 1956 see p. 57.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் கூட தமிழ் மாலுமி முகைய்யதீன் வக்குசு நியூசிலாந்து வரை சென்றுள்ளான். அவனுடைய கப்பல் மணி இன்றும் நியூசிலாந்து வெல்லிங்டன் நகர **அருங்காட்சியகத்தில் உள்ளது.**

5. பாலினீஷியத்தீவு மக்களிடையே தாங்கள் இந்தோனேசியப் பகுதியிலிருந்து குடியேறியதாக நம்பிக்கை இருந்தது. அதறகும் முன அவர்கள் இந்தியாவிலிருந்து சென்று இருக்கவேண்டும் என்பது அறிஞர்கள் கருத்து. ஆபிரகாம் போர்னாந்தர் (1821 -1887) என்பவா இதுபற்றி 1878ஐ ஒட்டி ஒரு பெரிய நூலை வெளியிட்டுள்ளாா. அந்தக் காலக் கட்டததில், திராவிட (தமிழ்) மொழி ஆராய்ச்சி நன்கு பரவாது இருந்தமை யால் அவர் பாலினீஷிய மொழி, பண்பாடு ஆகியவற்றுக்குப பொதுவாக இந்திய ஒப்புமைகளைக் கூற இயலாதவா ஆயினாா[4] இந்தோ ஆரிய மொழிகள் கொளுவுநிலை (Inflectional) மொழிகளாவதற்குமுன் திராவிட மொழிகளைப்போல ஒட்டுநிலை (Agglutinative) மொழி களாகத்தான் இருந்திருக்க வேண்டும். அந்த நிலையிலேயே பாலினீஷிய மொழிகளைப் பேசுவோா ஆரியரிடமிருந்து பிரிந்துசென்றிருக்க வேண்டும் என்பதும் போர்னாநதர் கணிப்பு. தமிழ் போன்ற ஒட்டுநிலை மொழிகளை இழிசினா் பேசும்பொழுது உருப்பெறுபவையே வடமொழி போன்ற கொளுவுநிலை மொழிகள் என்ற அறிஞா் டெக்னா் கருத்து நினைவு கூரத்தக்கது[5] இந்திய மொழிகளுக்கும் பாலினீஷிய மொழிகளுக்கும் இடையே ஒப்புமைச் சொற்களாக போர்னாந்தர் தரும் பட்டியலில் பலவும் தமிழ்ச் சொற்களாக இருப்பதைக் காணலாம்.

6. பசிபிக் தீவு மொழிகளின் இலக்கண அமைப்பு, சொற்றொடா் அமைப்பு ஆகியவையும் தமிழ் போன்றவையேயாகும். ஈஸ்டர் தீவுக்கு அம் மொழியில் தே-பிதோ-ஓ-டெ- ஹெனுவா (Te-Pito-o-te-Henu va) என்று பெயர். அதாவது உலகத் துடைய உந்தி என்று பொருள்.

---

4. Abraham Fornander:- An account of the Polynesian Race, its origins, and Migrations and the ancient history of the Hawaaian people to the times of Kamehameha 1 (3 vols. 1878 etc., Trubner, London) Reprinted 1969: Charles E. Tuttle CO.

P. 138 (1) "The dark colour and the black eyes ...... point to an intimate connection or rather complete fusion with the brown or Dravidian race.

p. 35 (vol.III) The immigrants coming from the northwest from Deccan, were the preponderating majority, and absorbed into themselves those who come from the north and northeast, from Further India.

P. iv. (Vol II): The language is fundamentally Aryan of a pre Vedic type before the inflections were fully developed or generally adopted.

5. Prof Esaias Tegner:- "Sprakels makt ofver tan° ken" (The power of language over thought) Stockholm 1880.

"Flections have their real source not in the thought of man, but in his tongue; they rise not from thinking quicker, but from speaking quicker; not from thinking correctly, but from speaking more incorrectly" "And if flections, as a higher form of speech stand in any connection with a higher civili sation how explain the case that all the principal cultivated languages at present show a decided ten dency to replace flections with turns of repression which rather belong to the class of isolated or agglutinated languages."

7. பண்பாட்டுக் கூறுகளில் தமிழர்களுக்கும் பசிபிக்தீவு மக்களுக்கும் உள்ள ஒப்புமைகள் மிகப்பல. பெருமக்கள் (ஆண்கள் உட்பட), காதுகளில் பெரிய துளைபோட்டுத் தொள்ளைக் காதாக விடுவது சிறப்பாகக் கருதப்பட்டது. பச்சை குத்திக் கொள்ளுதல் மற்றொரு வழக்கம். மலாகளுக்கும் அவர்கள் இன்று வரையும் சங்ககாலத் தமிழர்களையொப்ப முதன்மை தருகின்றனர். தமது "தமிழ்த்தூதில்" தனிநாயக அடிகளார் கூறுவது நினைவுகூரத்தககது. "ஹாவாய்த் தீவுகளுக்கு யான் சென்றபொழுது சங்க இலக்கிய காலத்தின் நினைவு என்னையறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அங்கு துறைமுகத்துக்கு வந்தவர் அனைவரும் கண்ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர்; விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூட்டி விடையளித்தனா.; பாடினர். அலோஹா என்னும் ஹாவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இபபெண்டிரும் ஆடவரும் சங்ககாலத் தமிழ் மக்களைபபோல எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சியின்று".

| **ஹவாய், டொங்கா, போன்ற பாலினீஷிய மொழிகளின் சொற்கள்** | **தமிழ்ச் சொல்** |
|---|---|
| ஆலா, ஹாலா, சாலா (Read) | சாலை |
| அலோஹா | நட்புமுறையில் ஒருவருக் கொருவர் கூறும் வாழ்த்துச் சொல் (சங்க இலக்கிய "எல்லா") |
| தபு (Taboo) – தடைசெய்யப்பட்டது. மீறினால் உயிருக்குக் கேடு வருவது | தபு (தொல்காப்பியம் எழுத் ததிகாரம் நூற்பா 76– உரை) |
| மொளெ | மூளை |
| காய் காய் (be red) | ஞாயிறு (காய்தல்) |
| மெலு (soft) | மெல் |
| காண | காண் |
| பழ (soft, ripe) | பழு, பழம் |
| வா (Mangarewa: Waa Hawaian : Waha | வாய் |
| hele (go) | செல் (ச = க = ஹ |
| ஆளி (Alii) | = தலைவன் (ஆள்) |
| ஆரி (Arii) | = **தலைவன் (ஆள்)** |
| அரியோய் (Arioi) | (பசிபிக் தீவுகளில் மதிக்கப் பட்ட இனத் தலைவர்கள்; ஆளும் சாதியினர்) ஆளு வோர் / **அரையோர்** / அரசர் |
| ia ora na (good day) | நல்ல நாள் (ஓரையென்று சொல்லலாம்) |
| புரெ (bure) | புரை (வீடு) |
| பூவா ஆளி (royal flower) | சிறந்த பூ. (அரச பூ) |

# Cultural Variations in North and South India

Dr. Asha Gupta
U.G.C. Career Awardee
A-20, New University
Campus **Jammu-180004.**

The present paper is primarily based on literature and field survey gathered through my U.G.C. career Award project and my Ph.D.dissertation on Editing & folk-religions study of Bhets, say folksongs in prize of Goddesses. i.e. Amman Paadalgal in Tamil language. Thus, religions or folkreligions culture elicited from Punjabi bhets or goddess temples or socio-religions festivals, is the basic structure, and the main emphasis being on festival culture. The basic structure, hereafter, called "Punjabi Culture" (P.C.) would be compared with the corresponding religions culture of temples, gods and goddesses particularly festivals of Tamil Nadu. The latter is a target structure i.e. Tamil Culture (hearafter T.C.).

I am fairly aware of T.C. and more acquainted with it when I accompanied my husband, Dr. Baldev Raj Gupta, prof. Head, Punjabi Deptt.Jammu University, for the VIII International Tamil Conference (Jan.I-5,1995) which was held at Thanjavur where the Brihdeswara temple (Periya Koil) is the main centre of Socio- religious T.C. apart from other surrounding cultural Centres of Tamil Nadu. Besides, I have collected data from a Tamilian couple Mrs. & Dr. Ananthasaynam in R.R.L. Jammu.

A few stock phrases like Vanakkam, mihamiha nandri, rombe mahilchi, Tamil teriyadu etc. were picked up from my husband who had in a way proved to be a good interpreter during my visit to Karnataka, Kerala & Tamil Nadu thrice(1984, 1994 and 1995). All this created interest in my mind to meet Tamil closely and observe T.C. minutely. I also studied some books mentioned in the paper.

As stated earlier, both my Ph.D and U.G.C. career Award Project being related to multidimentional approach to Punjabi bhets, of prefer to speak on the Variations in P.C. and T.C. within context of festivals celebrated in Punjabi speaking tracts (Punjab & Jammu region) and Tamil Nadu - the embodiment of the traditional ancient culture.

To being with, let us take Lohri festival celebrated by Punjabis, similar to Tamilian Pongal. Both there festivals coincide with Makra Sankranti of the North and South India. Lohri is also the name of mother goddess, the sister of a king. The burning of Lohri at winter night falling mostly on 13th of Jan. every year symbolizes the firing as an evil spirit. Evil spirit is dashed to ground and the ever lasting goddess Lohri is worshiped round the fire. The next day i.e. on sankranti day Punjabi people eat rice cooked in sugar-cane juice called khir, which is prepared on Lohri night. There is a folk proverb poh ridhi Magh Khadhi i.e. Khir was cooked in the month of Poh and eaten next Magli month (Sankranti day).Lohri is also a seasonal festival for Punjabis when there is too much cold. People from all walks of life gather near fire and eat hot food like date, gur, reorian, groundnuts etc.

In Tamil Nadu, Pongal is celebrated to rejoice the harvest. It lasts for a few days. In the words of Mrs. Garihali 'Pongal is the greatest festival of Tamils' (Destinations - Tamil Nadu, International Tamil Conference Malar 1995,P.P-E 61).Three main Pongels have been depicted in 'Festivals of India' (Ministry of Information and Broadcasting Government of India, Delhi, P.P. 22-23).

1. Bhogi Pongal - is a sort of family festival celebrated on the first day of the Pongal, festival.

2. Surya Pongal - is the Second day celebration, dedicated to the sun (surya).Ladies boil rice in milk and jaggery and offer to sun God. Friends greet each other by asking "Is it boiled?" the answer is yes, "it is". Great rejoicing fallows. Actually from this sun-worship procedure, the festival is called Surya - Pongal.

3. Mattu-Pongal - Next day to main Pongal day is 'Mattu Pongal'. on this day the Pongal is offered to local deities and also given to the Cattle. Horns of cows and oxen are painted with bright colours. They are worshiped with flowers. From Mattu Pongal, one can infer that Pongal is also the festival of farmers and common mass like Lohri (Appendix I). In Punjab also, there is a separate festival namely Gopathian or Gop-Ashtami in summer when ladiesoffer balls made of wheat-flour to cows. Their horns are garlanded with flowers. In Tamil Nadu there is also a bull fight on Mattu Pongal day which is lacking in Punjab.

Just as Punjabis sit together and eat fruit, riorian, chirve (made of boiled rice) sit near the fire, Tamilians also from all walks of life eat pongal together. Pongal is eaten with family at noon when everybody (including passers by, the humblest poor) is invited to share, and enjoy the offerings whereas Maghikhir (i.e. rice cooked in sugar cane juice) is eaten alongwith additional khichri cooked fresh on Maghar Sankranti in the morning. The day is same but the timings of eating are different for Punjabis and Tamils. Eatables Pongal and khir or chirva also have same content i.e rice, milk, jaggery, sugar-cane juice etc. However for Tamils Pongal is extended to birds and the cattle. "coloured balls of the pongal are also made and left in the open for birds" as per the information contained in the '<u>Festivals of India</u>'.Similarly, Gop Ashtami (Gau-Athain) of Punjabis is limited to cows on different days but Mattu Pongal is extended to bulls also. During the bull fight (Called Jallikattu in Tamil). "Bundles containing money are tied to the decorated coloured horns of ferocious bulls and unarmed villager youths try to wrest the bundles from them. Bullock-cart race and cock-fight are also held ("<u>Festivals of India</u>", P.23).

Pongal seems like Vaisaki festival of Punjab as harvest festival. Apart from bhogi, surya, cattle pongal in Tamil Nadu, there is a pongal for ladies only especially for unmarried girls, called Ka<u>nnipongal</u>.The word 'Kanni' in Tamil means unmarried girl. Unmarried girls of a village go in groups to river bank or a picnic spot and collectively prepare some dishes like pongal and indulge in folk songs &

folk dances. As the girls are otherwise not allowed to go outside, this is the occasion for the Village boys to watch the girls & select a match for them.

Similar to our Karva-Chouthl married women in south also observe 'Nombu' for the welfare & long life of their husbands. Nombu is observed on two occasions. Vaishnavites, followers of Lord Vishnu observe this Nombu as 'Karadaiyan Nombu' ( a special dish to eat on the occasion as North Indians eat Phonies) in the month of March generally on Ekadashi Tithi. Saivites i.e. followers of Lord shiva observe this Nombu as "Varalakshmi Nombu" similar to our fast, they (married women) observe fast on this day and worship their husband in the evening in their rich costumes.

Shivratri is another festival which has marked variations as well as some similarities in P.C. and Tamil Culture. For Punjabis, it is one night festival when Lord Shiva is worshiped in temples, mostly ladies observe fast on this day of chaturdashi, In temples Langar (Prceti Bhoj) is arranged for children and poor people. It is also believed that Shivji lets all snakes out on this day.

In Chidamabaram, Tamilians celebrate this festival for five days. In her article 'Destinations - Tamil Nadu' published recently in the Malar released on the occasion of the VIII International Tamil Conference, Mrs. C.K. Gariyali calls this festival Natayanjali i.e. Dance festival starting from the day of Shivaratri - the greatest festival of shiva, the Lord of Dance and Destruction. The legend of chidambaram dance festival runs like this - Chidambaram was the temple of kali goddess. Shiva Challenged her to dance. He lifted his leg upto his ear to put back a fallen ear ring. Goddess kali could not perform this move and in anger shifted to Tillai Kalai (2km. from Chidambaram)

In Punjabi culture shivratri has nothing to do with kali. However, in Kashmir, Valley, Shivratri is for five days as in Chidambaram. In Punjab, Shivratri is wedding night of

Shiva Parvati. The other version is that Lord Shiva was born on this night.

Both on Lohri (Pongal in Tamil) and Shivratri people greet each other.In Tamil Nadu mainly greeting cards are sent to near & dear for Pongal day.

There may be so many folk-songs about Pongal and Shivratri among Tamilians, but Punjabi has a rich heritage of folk-songs about Lohri and Parvati Goddess **(See Appendix I)**.

Madurai river festival is another festival of T.N. which is like Shivratri of Punjab. This festival is called Sundaresa or Meenakshi Kalyanam i.e. a marriage festival of Shiva and Meenakshi (Parvati). In T.C. Kartikeya, younger son of shiva is worshipped on Kartikeya Diwali also,but not in P.C. Shivlinga is worshipped differently in P.C. and T.C.

Navratras are celebrated twice in a year. The word Navratra literally means nine nights when Goddess Durga is worshiped every time in P.C. In T.C. different goddesses are worshiped on different days of Navratras falling in Oct. & Nov. First three navratras are dedicated to the goddess of wealth (Lakshmi), the next three to the goddess of power (Shabti) and the last three to the goddess of learning (Saraswati). In P.C. there are no such compartments. On eighth & ninth day of Navratras i.e. ashtami & Navmi, small girls (Kanjban) are invited for worshiping in the morning. People give then offerings like halwa, puri, chunni etc. Male members wash their feet. This ritual symbolises the purity of heart of those small girls who are worshiped in the human physical form of Devis. The nine nights of Oct & Nov. are followed by Dussarah when effigies of Ravana are burnt, These Navratras are always followed by fifteen sharadas when brahmans are invited to feast in the name of fore fathers. That is why there is a proverb in P.C. that 'Gai Sharad Aai Narate, brahman baithe chup chupate'. I hope this is the same in T.N.

Navratras fall twice both in P.C. and T.C. The first shift is in March - April when there are neither sharads nor Dusshara as in P.C. The Second Shift is in Oct-Nov as stated above. In P.C. Ram Navmi is also twice in a year. The birth of Rama is called Ram Navmi day on the ninth navratra of March - April. In Oct. & Nov's Navratra's Ram Navmi is krown as the eve of Vijay Dashmi. In Tamil Nadu, Kamba Ramayan is recited during march Navratras whereas in P.C. Ram Leela (life of Rama) is played in Navratras of Oct. & Nov. similar to Sabhi Kahn of P.C., in T.C. also girls dance and sing before a deity made of Kalasam ( a silver, copper or clay vessel) with a coconut and mango leaves. In Jammu proper, there is a local fair of Bhave walimata in March-Apr. every year. This is a local festival. In other areas also there is festival localised at the main temples of goddesses as Naina Devi in Himachal, Asha Purni at Pathanbot, Kali Mata at Batala & Patiala, Mansa Devi at Chandigarh. Piligrims from all corners of India come to Mata Vaishno Devi at Katra throughout the year. But specially in Navratras there is a huge rush of pilgrims as they believe it is the more significant time to have Darshans of Maa Vaishno.

Jagrata or Jagran is also arranged in Navratas where Jagrata Mandalis sing Bhets for the whole night. In Tamil Nadu also Jagran is arranged only on Ram Navmi which falls generally in the month of April and is celebrated as Ram's birthday . Ramayan is read on all the nine days upto Navmi followed by Ram's "Pattabishekam" on the final day.

According to P.C. Deepawali is celebrated after 21 days of Dussehra and is connected with the arrival of Rama at Ayodhya. Navratas, Ram Navmi, Dussehra and Diwali in Oct. Nov. are Rama's festivals in P.C. Illumination at Deepawali night coincides with the celebration of Rama's arrival besides victory by Guru Gobind singh. In T.C. Deepawali is celebrated early in the morning. It is compulsory for everybody to take bath in early morning, though in P.C. there is a Mahatam (Significance) of taking bath early morning in the whole month of Kartik as the winter starts in this month in north India.In T.C. Deepawali is also connected with Shiva worship will be a snake at

midnight (a symbol of shiv shakti). Hence the people lit lamps throughout the night (a detailed legend is in the Appendix 3).On this basis also Deepawali is one day earlier than Punjab. It is called Kartika in T.C.

In P.C. Lakshmi (Goddess) is worshiped on Deepawali night, People distribute sweets & gifts among near & dear both in P.C. & T.C. Immediately on the third day of Deepawali, another festival is Tibba (Bhaiya Duj) when sisters make a mark of Raj Tilak on the foreheads of their brothers with saffron, rice & flowers and offer sweets. In return, brothers give them money, clothes and other gifts. Rabhi is also such a festival which symbolises the brother-sister relations even among cousins in P.C. However in T.C. cross Cousins (Maternal Uncle's son-daughter, father's sister's son-daughter) can marry each other, so there are no such festivals.

If festivals like Rabhi, Bhaiya Dooj denoting brother-sister ties are absent in T.C. Some Tamil festivals too are missing in Punjabi Culture. For instance, religious festivals like Mariaman festival, Murga worship, Jallikattu, Andal festival and so on.

Thus we can conclude that Devi/Deity cult is the base of most of the religious festivals in P.C. and T.C. The basic spirit is the same. Variations lie in the mode of celebration due to climatic and other physical conditions. In T.C. Shiva Lingam is humanised and dressed, but in Punjabi Culture it is quite naked. There is a myth about moving shiva unstripped among the wives of Rishis in P.C. In T.C. during festivals or otherwise, every offering is offered through the priest and there is no direct touch of the deities and shivlings in the temples. In punjab culture devotees approach directly. They offer water, touch and press shivlingum, present fruits, flowers etc. to Gods and Goddesses. Offerings also vary according to physical environment. In T.C. salt, chandan, sandur, coconut are offered to deities and returned to devotees. In Punjabi Culture Sweet prasad is given by priests to people gathered near the statues.

Climate of T.N. makes it possible to allow males to enter temples with only the dhoti. In P.C. it is not possible in winter.

Many more variations in P.C. & T.C. can be elicited from festivals, songs, folk amman padalhal/bhets or details given about some Rural festivals and ceremonies by William Crook in "The Popular religion and folklore of North India".

Thus we find, here there and everywhere national integration identity and unity in cultural pluralism from Kashmir to Kanyakumari.

# உலக மொழிகளில் தமிழ்ச் சொற்கள்

## 1. ஹங்கேரி மொழியில் தமிழ்ச் சொற்கள் (ஓர் ஒப்பீட்டாய்வு)

**முனைவர் இரா. முத்துக்குமாரசாமி**

தமிழ்நாடு அரசு
யுனெசுகோ குழு உறுப்பினர்
(ஓய்வு) முது நிலை விரிவுரையாளர்,
மாவட்ட கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,
திரூர், தமிழ்நாடு

### 1.00. முன்னுரை

குமரிக் கோட்டிறைவனையும் நாவலந்தீவின் தண்டமிழ்ப் பாவையையும் வாழ்த்தி வணங்கி அங்கேரி மொழியில் தமிழ்ச் சொற்கள் என்ற தலைப்பில் உலகமொழிகளில் தமிழ்க் கூறுகள் என்ற மாநாட்டு மலர்மாலைக்கு ஒரு பூவாக அளிப்பதில் இக்கட்டுரை ஆசிரியன் மகிழ்ச்சியடைகிறான்.

### 2.00 ஆய்வின் நோக்கம்

2.01. திராவிட மொழிக் குடும்பத்தின் உயர்தனிச் செம்மொழியான தண்டமிழ், ஃபின்னோ–உக்ரியக் குழுவின் உராலிக் அல்ட்ய்க் மொழிக் குடும்பத்தில் தனிச்சிறப்புடன் விளங்கும் மக்யார் (மட்யார்) என்னும் ஹங்கேரி மொழியுடன் கொண்டுள்ள உறவு என்ன? இவ்விரண்டும் ஒரே மூல மொழியினின்றும் தோன்றினவா? ஃ என்பதற்கான விடை காண்பது ஒரு நோக்கம்.

2.02. தமிழ், ஹங்கேரி என்னும் இரண்டும் மொழிகளில் காணப்படும் ஒப்புமைச் சொற்களைத்(Cognate words) தொகுத்து வகைப்படுத்தியும், ஒப்பிட்டாய்ந்தும், விளக்கம் கண்டும் ஏன் எவ்வாறு காணப்படுகின்றன? என்பதற்குப் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பது மற்றொரு நோக்கம்.

### 3.00. ஆய்வின் பிறப்பு

3.01. 1954–1958 ல் இக்கட்டுரையாசிரியன் தருமை ஆதீனத் தமிழ்க் கல்லூரியில் பயின்ற போது திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் என்ற நூலில் ஹங்கேரி மொழியில் 30 தமிழ்ச் சொற்கள் இருப்பதைக் கால்டுவெல் என்ற மொழியறிஞர்

சுட்டிக்காட்டியதைப் படித்து உணர்ந்தபோது வியப்படைந்தான். அப்பொழுதே இந்த ஆய்வு உணர்வு அரும்பியது.

3.02. "உலகில் தமிழும் தமிழரும்" என்ற நூலில் முனைவர் பொன். கோதண்டராமன் அவர்கள் "... பின்னோ–உக்ரி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மக்யார் மொழிக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்புகள் மேலும் தொடர்ந்து ஆராயப்பட வேண்டும் என்று கூறியிருப்பதை வடித்துணர்ந்த போதும், இவ்வாய்வு மலர்ந்து இன்று அலராக உங்கள் கையில் வந்துள்ளது.

## 4.00. ஆய்வு முறை.

"ஒப்பிட்டறிதல், வேறுபாடறிதல், வரையறுத்தல், விவரித்தல், விவாதித்தல், சொற்பட்டியல் வரிசைப்படுத்திக் கூறுதல், மதிப்பிடுதல், விளக்குதல், நிறுவுதல், சுருங்கக் கூறுதல்" என்ற ஆய்வு முறைகளையும், தொன்மையியல், நிலவியல், வரலாறு போன்ற துறைகளின் சான்றுகளையும் கொண்டு ஆராய்வதை இக்கட்டுரைகளின் ஆய்வு முறையாகக் கொண்டுள்ளான்.

## 5.00. ஹங்கேரி மொழியில் தமிழ்ச் சொற்கள் என்பதன் விளக்கம்.

5.01. உலகிலுள்ள 5,770 மொழிகளுள் ஹங்கேரி என்னும் மக்யார் மொழியும் ஒன்று. 93,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள ஹங்கேரி ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றாகும். அந்நாட்டில் இம்மொழி வழங்குகிறது. இம்மொழி பேசுவோரின் முன்னோர் யூரல் மலையைச் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்த ஃபின்னோ–உக்ரிக் மக்களினத்தைச் சேறந்தவர்கள். இவ்வினத்தின் கிழக்குப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஹங்கேரியன் மொழி பேசுவோராவர். இம்மொழியை உராலிக்–அல்ட்ய்க் மொழிக் குடும்பத்தில் மொழியியல் அறிஞர்கள் சேர்ப்பர். உராலிக் மொழிகளை ஃ பின்னிக் என்றும் உக்ரிக் என்றும் இரண்டாகப் பிரிப்பர். ஹங்கேரியன் மொழி உக்ரிக் பிரிவைச் சேரந்தது உக்ரிக் கி.மு.3000 முதல் வழங்கி வருகிறது. இது ஃ பின்னோ–உக்ரிக் என்பது ஃபின்னிக் என்றும் உக்ரிக் என்றும் பிரிந்த காலமாகும்.

5.02. மக்யார் என்னும் ஹங்கேரி மொழியில் 6,000 சொற்களைக் கொண்ட விளக்க அகரமுதலியும், 80,000 சொற்களைக் கொண்ட அகரமுதலியும் உள்ளன. ஆனால் இக்கட்டுரையாசிரியன் ஆராய எடுத்துக் கொண்டது சிறிய ஆங்கில–ஹங்கேரி, ஹங்கேரி–ஆங்கில அகர முதலியிலுள்ள 9,000 சொற்களேயாகும். 9,000 ஆங்கிலச் சொற்களுக்கு இணையான ஹங்கேரிய சொற்களாகும்.

**5.03.** இந்திய நாட்டிலுள்ள 1,700 மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். இந்தியாவில் ஒரு மாநிலம் ஆன தமிழ்நாடு 130069 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையது. இந்நாட்டிலும், இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் குமரிக்கோடு என்றும் மலையைச் சார்ந்த பகுதிகளிலும், (தற்போது கடலுக்கடியில் அபநாசி நிகிடின் கடல்மலை எனப்படுகிறது) குமரி ஆறு அதன் கிளை, துணை ஆறுகளின் கரைகளிலும், அருகிலும் வாழ்ந்து, உலக முழுவதும் பரவிய திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வினத்தின் ஒரு பிரிவினர் கடல் கொண்டது போக எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தம் மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. அக்குடும்பத்தில் உயர்தனிச் செம்மொழியாக, அன்னையாகத் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ் கி.மு. 10,000 பத்தாயிரம் முதல் வழங்கிவரும் ஓர் உயர்மொழியாகும். என்றுமுள தென்தமிழ் என்னும் தமிழ்மொழியில் ஏறத்தாழ 150,000 சொற்கள் உள்ளன எனத் தமிழ் லெக்சிகன் என்னும் தமிழ்–ஆங்கில அகரமுதலி கூறுகிறது. ஆறு நூறாயிரம் சொற்களைக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி பதின்மூன்று மடலங்களாகத் தமிழக அரசின் ஆதரவின் கீழ் உருவாகி வருகின்றது.

